LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL MAGAZINE

MYLAPORE

EDITORIAL BOARD

EDITOR-IN-CHIEF

Srimathi S. Chellam, M.A., L.T.

ASST. EDITORS

Srimathi	C. R. Sathyabhama, B.A., B.T., H.Sc. (Dip.)	(*English Section*)
,,	Kanthi Sivaswami, B.A., B.Ed.	(*English Section*)
,,	V. Rajammal	(*English Section*)
,,	R. Visalakshi	(*English Section*)
,,	V. Sarojini, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	R. Saraswathi Bai, B.A.	(*Tamil Section*)
,,	K. S. Anandavalli, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	A. K. Balambikai, Vidwan (Tamil)	(*Tamil Section*)
,,	R. Savitri, Praveen, Pracharak, (Hindi)	(*Hindi Section*)
,,	K. Dhanalakshmi	(*Art Section*)

PUPIL-EDITORS

R. Mythili	Form VI-A	(*English Section*)
E. K. Parvathavardhini	,, V-B	(*English Section*)
T. N. Gomathi	,, VI-A	(*Tamil Section*)
T. K. Radha	,, V-A	(*Tamil Section*)
C. R. Chandra	,, V-A	(*Hindi Section*)
P. Nithyakalyani	,, VI-D	(*Art Section*)

Printed by Mr. G. Raghavan at The Huxley Press, 114, Armenian Street Madras, G.T., 1260 Copies and Published by Srimathi S. Chellam, M.A., L.T., Editor at Lady Sivaswami Ayyar Girls' High School, Mylapore.

CONTENTS

	PAGE
தமிழின் இனிமை—T. N. Kamala, VI-A ...	1
பிறர்க்கென வாழ்ந்த பெரியார்—V. E. Banni Bai, VI-B ...	2
நாவடக்கம்—N. Thara Bai, VI-C ...	4
சித்திரக் கலை—T. K. Seethalakshmi, VI-D ...	5
எனது இலட்சியம்—C. R. Chandra, V-A ...	6
திருச்செந்தூர் வேலன்—E. K. Parvathavardhini, V-B ...	8
வீர சோதனை—N. Ganga Bai, V-C ...	9
கல்வி—M. Meenakshi, V-D ...	10
எம் பள்ளியில் கலைத்தெய்வம்—D. Sasikala, IV-A ...	11
என் பள்ளி வாழ்க்கை—M. Visalakshi, IV-B ...	13
மூன்று—R. Annapurani, IV-C ...	14
பேரறிஞர் பெர்னுட்ஷா—K. Seethalakshmi Krishnan, IV-D ...	15
பொங்கல் விழா—J. Meenakshi, III-A ...	16
மலைக் கோட்டை—V. Uma, III-B ...	17
தாய் மொழிப்பற்று—G. Radha, III-C ...	18
நோபெல் பரிசுகள்—A. Lakshmi, III-D ...	19
இசை வளர்த்தவர்கள்—S. Vaidehi, III-E ...	19
பல்லவர்கள்—D. Hemavathi, II-A ...	21
நான் கண்ட திருவிழாக் காட்சி—M. R. Kalpakam, II-B ...	22
மரியாதை—L. S. Sakunthala, II-C ...	23
ஒரு பிடி கடுகு—A. Saraswathi, II-D ...	24
பாரதி சொரூபம்—P. R. Santha, II-E ...	25
தாமிரபரணியின் சுய•சரிதை—P. R. Jamuna, I-A ...	26
சென்னையில் ஒரு வாரம்—S. R. Kamala, I-B ...	27
மைசூர்—R. Vathsala, I-C ...	28
ரேடியோ நிலையம்—D. Kalaivani, I-D ...	29
கப்பல்—S. Vathsala, I-E ...	30
ஆசிரியர் சங்கம்—C. R. Sathyabhama, B.A., B.T., H.Sc. (Dip.) & V. Sarojini, *Vidwan (Tamil)* ...	31
பழைய மாணவியர் சங்கம்—T. Kalpakam, B.A., B.T., & M. Pichai ...	33
அன்னையர் சங்கம்: 1954-'55—V. Rajammal ...	34
மாணவியர் சங்கம்—D. Koulsalya, VI-A & C. R. Chandra, V-A ...	37
பள்ளி ஆண்டு விழா: 1953-'54—V. Sarojini, *Vidwan (Tamil)* ...	39
நுண்கலை விழா—Kamala Rajagopalan, B.A., L.T., & V. Rajammal.	41
கலைக்கோயில்—R. Saraswathi Bai, B.A. ...	43
சங்கீத சபை—M. Gnanambal ...	45
மாணவியர் சங்க இறுதிக் கூட்டம்: 1954-'55—Chronicler ...	47

PAGE

यूसफ—R. Mythili, VI-A ... 1
देश भक्ति—P. S. Sundarambal, VI-D ... 1
फूलों से समझो!—C. R. Chandra, V-A ... 2
बंबई शहर—E. K. Parvathavardhini, V-B ... 3
मुझे क्यों गाँव पसन्द है ?—C. Rani Bai, V-D ... 4
कपडा—M. Kalanidhi, IV-A ... 4
ऐक घटना—S. Subadra, IV-B ... 5
हमारा स्कूल—T. S. Seethalakshmi, IV-C ... 5
धीपावली—K. R. Rajeswari, IV-D ... 6

THE FIVE YEAR PLAN—D. Kousalya, VI-A ... 1
ADVANTAGES OF MODERN LIFE—T. N. Kamala, VI-A ... 2
KEEP FIT—V. E. Banni Bai, VI-B ... 2
OUR EXCURSION TO THE KING INSTITUTE—M. Prema, VI-C ... 3
OUR CITY CONVEYANCES—K. Chitra, VI-D ... 4
THREE SELF-EDUCATED MEN—C. R. Chandra, V-A ... 5
THE CELEBRATION OF THE RADIO MONTH —E. K. Parvathavardhini, V-B ... 6
MEDICAL AID FOR THE POOR—K. Nirmala, V-C ... 6
MYSORE—T. V. Sundari, V-D ... 7
THE BUTTERFLY—R. Anandavalli, IV-A ... 8
THE CLIMATE OF MADRAS—C. R. Prema, IV-B ... 8
SARVODHAYA DAY—R. Vasantha, IV-B ... 9
HOLIDAYS—P. B. Visalakshi, IV-C ... 10
MY SCHOOL—K. V. Kamala, IV-D ... 11
MY VILLAGE—A. Usha, III-A ... 11
THE EXAMINATION WEEK—G. R. Leela, III-B ... 12
THE RAIN—D. Loganayaki, III-C ... 13
THE FILM-"THE RIVER"—A. Lakshmi, III-D ... 13
A RACE—Kalyani Srinivasan, III-E ... 14
THE VEENA—S. Sankari, II-A ... 14
OUR SCHOOL PRAYER HALL—M. R. Kalpakam, II-B ... 15
THE NIGHTINGALE—T. N. Chandra, II-C ... 15
THE GOOD BEAR—A. Ponnammal, II-D ... 16
BUSES—N. V. Anasuya, II-E ... 16
MY PEN—V. Mythili, I-A ... 17
MY BIRTHDAY—K. Rathi, I-B ... 17
THE YEAR—C. Champakam, I-C ... 17
MY FATHER—K. Hemavathy, I-D ... 18
OUR GARDEN—R. Rajeswari, I-E ... 19
OUR ANNUAL SPORTS—Chronicler ... 19
THE TENTH ANNUAL EXHIBITION—Chronicler ... 21
THE TEACHERS' UNION: VALEDICTORY MEETING—Chronicler ... 22
EDITORIAL NOTES ... 24
OUR SCHOOL DIARY—1954-55 ... 33

Marble Idol of Saraswathi Devi
installed in a specially constructed Shrine in our Prayer Hall on the 6th of October, 1954.

லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள்
உயர்தரப் பாடசாலைப் பத்திரிகை
சென்னை

Vol. XVII | | MARCH, 1955

தமிழின் இனிமை

'இனிமைத் தமிழ் மொழி, எமது—எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல்லமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை.'

என்ற பாரதிதாசன் கவிதையின் படி தமிழின் இனிமை அளவிடற்கரியதாம். பல மொழிகளில் உயர் மொழி எனப் பலராலும் போற்றப்படும் மொழி தமிழ் மொழியாம். ஆம்! தமிழன்னை எழில் மிக்கவளே. நல்லிசைப் புலவர் பலர் அரிய நூல்களைத் தமிழில் இயற்றி அன்னைக்கு அர்ப்பணித்து அந்நூல்களால் அவளை அழகு செய்திருக்கும்போது தமிழ்த்தாய் எழில்மிக்கு ஒளிரும் தன்மையள் என்பதில் ஐயமுண்டோ? 'மொழியரசி' யென்ற தொகுப்பு நூலில் பிற நாட்டவரும் தமிழின் இனிமையைப் பாராட்டி எழுதிய செய்திகளும் 'போப் ஐயர்', 'கால்டுவெல் ஐயர்' முதலிய மேனாட்டாருடைய பாராட்டுரைகளும் நம் நாட்டுத் தமிழறிஞர்களின் பாராட்டுரைகளும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தமிழின் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டுவதாக விளங்குகிறது.

தமிழின் சிறப்பைத் தமிழன்னையின் தொண்டர்களாகிய புலவர் பெருமான்கள் இயற்றிய ஒவ்வொரு பாடலிலும் காணலாம். வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதியார் ஆகியோர் பலரின் பாடல்கள் தமிழின் இனிமையை உலகறியப் பறைசாற்றுகின்றன.

தமிழ்ப் பாடல்கள் கேட்குந்தோறும் செவிக்கும், படிக்குந்தோறும் நாவிற்கும் தெவிட்டாத் தீஞ்சுவையை யளிப்பனவாம். 'யாம

றிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்' என்றார் பாரதியார். ஏன்! அதற்கு விடை வாயாற் கூறவும் இயலாது, எழுதவும் இயலாது. தமிழின் இனிமையை அநுபவிக்க மட்டுமே முடியும். அரும்பெரும் புலவர்களின் சிறப்பு மிக்க நூல்கள் தமிழில் அளவற்றன. இசையோடு பாடத் தகும் பாடல்களும் தமிழிற் பலவாயுள்ளன.

தமிழின் இனிமையை நுகர இயலாதவர், நுகராதவர் ஒரு பெறற்கரிய பேற்றினை இழந்தவராவர். தமிழ் மொழியின் வன்மையினைப் பாரதியார் 'வானமளந்தது அனைத்தும் அளந்திடும் வன்மொழி வாழியவே' எனக் குறிக்கிறார். வானையே அளக்கக்கூடிய அளவு வன்மை தமிழுக்கன்றி வேறெம்மொழிக்கு வரும்? அத்தமிழ்மொழி தன் புகழாகிய மணத்தை எவ்வளவு தூரம் பரப்பியுள்ளது! ஏழ் கடலையும் கடந்து தனது சிறப்பான இனிமை மணத்தை வீசி நிற்கும் தமிழின் இனிமையை விண்டுரைக்கவும் இயலுமோ!

T. N. கமலா, VI A.

பிறர்க்கென வாழ்ந்த பெரியார்

'பிறர்க்கென வாழும் பெரியாரே சேர்வார் துறக்கத்தும் காணாச் சுகம்' என்றார் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தேவாரப் பதிகம் ஒன்றில் அப்பர் பாடுகிறார். பெரியோர்கள் பிறர் நன்மைக்காகவே தம் வாழ்நாளைத் தத்தம் செய்கிறார்கள். அத்தகைய பெரியோர்கள் பலர் நமது நாட்டில் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். அத்தகையோருள் வித்தியாசாகரரும் ஒருவர். அவருக்குப் பல மொழிகள் தெரிந்திருந்திருந்தாலும் சம்ஸ்கிருத மொழியில் அவருக்குச் சிறந்த புலமை இருந்தது.

அவர் தம்முடைய இளம் வயதில் ஒரு சம்ஸ்கிருதக் கல்லூரியில் படித்தார். படிப்பு முடிந்த பின் அவர் பல வேலைகளில் ஈடுபட்டார். சில வருடங்கள் சென்றன. வித்தியாசாகரர் படித்த சம்ஸ்கிருதக் கல்லூரியில் ஓர் உபாத்தியாயர் வேலை காலியாக இருந்தது. அந்த வேலைக்கு வித்தியாசாகரரே தகுந்தவர் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர் அப்பதவிக்கு ஆசைப்பட்டாரா! அது தான் இல்லை! அச்சமயம் அவருக்குத் தெரிந்த ஒருவர் கல்கத்தாவிலிருந்து நூற்றைம்பது மைல் தூரத்தில் இருந்தார். அவரும் சம்ஸ்கிருத மொழியை நன்றாகக் கற்றறிந்தவராயினும், உத்தியோகம் கிடைக்கவில்லை. அவரை அழைத்து வந்து சம்ஸ்கிருதக் கல்

லூரியில் உபாத்தியாயர் வேலையில் அமர்த்தவேண்டும் என்று வித்தியா சாகரர் தீர்மானித்தார். சம்ஸ்கிருதக் கல்லூரியில் அவருக்கு அத்துணை செல்வாக்கு இருந்தது.

வித்தியாசாகரர் கொஞ்சமும் சோர்வடையாமல் நூற்றைம்பது மைல்களுக்கு அப்பால் இருந்த சம்ஸ்கிருதப் புலவரை நேரில் போய்ப் பார்த்து, அவரிடம் விஷயத்தைத் தெரிவித்து உடனே புறப்பட்டு வந்து வேலையை ஒப்புக்கொள்ளும்படி வேண்டினார். அந்தச் சம்ஸ்கிருதப் புலவருக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவர் அப்படியே சாகரரைக் கட்டித் தழுவிக்கொண்டார். "உபகார குணமுள்ள நீரே அந்த வேலையை எளிதில் பெற்றுக் கொள்ளலாம். இப்போது நீர் இருக்கும் வேலையில் நீர் பெறும் சம்பளத்தைக்காட்டிலும் நீர் எனக்குத் தேடித் தரும் வேலையில் உமக்கு அதிகச் சம்பளம் கிடைக்கும். உம்முடைய மனம் எவ்வளவு உயர்ந்தது! தீமை செய்கின்றவர்களே நிறைந்திருக்க, இருட்டில் ஓர் ஒளியைப்போல் நீர் விளங்குகின்றீர். நான் எப்படி என் நன்றியைத் தெரிவிப்பது என்று தெரியவில்லை" என்று கூறினார்.

இவ்வாறு புலவர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட சாகரர், "நான் என்ன செய்துவிட்டேன்! பிறர்க்கு உதவி செய்வதுதானே மனிதன் கடமை." என்று அடக்கமாகப் பதில் சொன்னார். பெரியவர்கள், பிறருக்குத் தொண்டாற்றுவதையே தம் கடமையாகக் கொள்வர்.

'எல்லாரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்
பராபரமே.'

—தாயுமானவர்.

V. E. பன்னிபாய், VI-B.



K. Eswari (adult class).

நாவடக்கம்

மக்கள் நாவைப் பெற்றிருக்கிறார்கள், ஆனால் வாக்கைக் காப்பாற்றியவர் வெகு சிலர். காப்பாற்றத் தவறியவர் பலர். நிதியையும், பத்தினியையும், பாலனையும் இழந்துங்கூட கொடுத்த வாக்கைக் காப்பாற்றினான் அரிச்சந்திரன். "எனது என்று சொல்லிக் கொள்ளக்கூடிய யாவற்றையும் இழந்து விட்டேன்; சொன்ன சொல்லை நிலை நிறுத்த வானரசையும் இழக்கத் தயாராயிருக்கிறேன்" என்று சூளுரைத்தான் அவன்.

'முள்ளில்லாத நாக்கு இப்படியும் பேசும், அப்படியும் பேசும்' என்பது பழமொழி. நாணயமற்றவனைக் குறித்துப் பேசும் போதெல்லாம் 'அவன் நாக்குச் சுத்தமில்லாதவன்' என்று குறிப்பிடுகிறோம். அது போலவே வாயாடிகளையும், வம்பளப்பவர்களையும் நீண்ட நாக்குடையவர்கள் என்கிறோம்.

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு'

என்பது வள்ளுவனார் வாக்கு. அது மட்டுமா? நாவை மிகவும் கவனமாகக் காக்கவேண்டும். நாவைக் காக்கத் தவறுபவர்கள் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர் என்ற உட்கருத்தைக் கொண்டதே

'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு'

என்னும் குறள். இதனை நினைவில் கொள்க. ஓய்வில்லாது பேசுபவன் பேச்சுக்கு மதிப்பே இராது. ஆகவே வார்த்தைகளை அளந்து பேசவேண்டும். அவசரத்தினால் சிந்திய வார்த்தைகளைப் பின்னால் அள்ள முடியாது.

நாவடக்கம் மிக மிக அவசியம். மௌனத்தால் தம் காரியத்தைச் சாதித்துக் கொண்டவர் பலர் 'பேச்சு வெள்ளிக்குச் சமம்; மௌனம் தங்கத்திற்குச் சமம்' எனக் கூறுகின்றது ஓர் ஆங்கிலப் பழமொழி.

நாவை அடக்கியாள்வது ஒரு கலை. இவ்வரிய கலையை ஒவ்வொருவரும் அவசியம் கைக்கொள்ள வேண்டும். நாவடக்கம் இல்லாதவர்கள் உலகில் சிறப்பாக வாழ முடியாது. அவர்கள் சமூகத்தில் மதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே நாவடக்கம் யாவருக்கும் இன்றியமையாதது.

N. தாராபாய், VI C.



A. Pattammal, II-B.

அகங்குளிர முகம் மலரும்

சித்திரக் கலை

உலகிலுள்ள கலைகள் அறுபத்து நான்கில் சித்திரமும் ஒன்று. சித்திரம் என்ற சொல்லிற்கு ஓவியம் என்பதே பொருள். பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் மக்கள் ஓவியக் கலையில் தலைசிறந்திருந்தனர் என்பதைப் பல தமிழ் நூல்களின் வாயிலாக அறிகிறோம். தமிழ் நாட்டுக் கோயில்களும் அவற்றிற்குச் சான்றுகளாக இன்றும் விளங்குகின்றன.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பர் சான்றோர். படிப்பில்லாவிடில் அறிவுணர்ச்சியுண்டாவதில்லை என்பது யாவரும் அறிந்ததே. ஒருவன் கல்வி யறிவு மிக்கவனாயின் இழிந்த பண்புகள் அவனை விட்டு நீங்கும் என ஆன்றோர் கூறுவர். இக்காலத்தில் பள்ளிகளில் ஆங்கிலம், தமிழ், வடமொழி, தெலுங்கு, கணக்கு, சரித்திரம், பூகோளம், சித்திரம் முதலிய பலவகைப் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. இவற்றை ஆசிரியர் கற்பிக்கும் பொழுது, சமநோக்கோடு கவனத்துடன் கேட்டு, அவற்றை மனத்தில் நிலைபெறச் செய்வது நம் கடமையாகும்.

ஒவ்வொரு எழுத்தையும் அதன் உருவம் நன்கு புலப்பட அழகாக எழுதுவதே எழுதுதல் என்று கூறப்படும். ஒழுங்குபட எழுதுவதும் ஒரு சிறந்த கலையாகும். கல்வி கற்றுக் கொள்வதில் நன்கு எழுதப் பழகுவதும் ஒரு சிறந்த கல்வியேயாகும். நன்றாய் அழகுடன் எழுத வல்லவனுக்கு உத்தியோகம் எங்கும் எளிதில் கிடைப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். கணக்குப் போடுவதற்கும் சித்திரக் கலையுணர்வு தேவையாகிறது. இதில் எண்களை வகையாகத் திருத்தமுடன் எழுத வேண்டும். உருவங்கள் அமைக்கவும், கோடுகள் பல வரையவும் தெரியவேண்டுமாதலின் இதற்குச் சித்திரம் வரையும் ஆற்றல் பயன் தரும்.

ஒரு பாடத்தைக் கேள்வி மூலமாகவும், உதாரண மூலமாகவும் அறிந்துகொள்வதைவிடச் சித்திர மூலமாக எளிதில் அறிந்துகொள்ளலாம். சிறு குழந்தைகளுக்கு வர்ணப் படங்களைக் காட்டும்பொழுது, அதனாலுண்டாகும் மகிழ்ச்சி வேறொன்றினாலும் உண்டாவதில்லை. சித்திரங்களைக் கண்டு மகிழ்ச்சி அடையாதவர் எவருமிலர்.

சித்திரம் வரைவதற்குமுன், வரையத் தொடங்கும் பொருளை ஆழ்ந்த நோக்கமுடன் உற்றுக் கவனிக்க வேண்டும். அங்ஙனம் கவனித்த உருவத்தை உள்ளத்திலமைய வைத்துக்கொண்டு பின் வரையத் தொடங்க வேண்டும். இதனால் பொருள்களை உற்று நோக்கும் சக்தியுண்டாகிறது. சித்திரம் வரைவதில், சீமைச் சுண்ணாம்பினால் வரைதல், தண்ணீர் கலந்த வர்ணங்

களால் வரைதல், எண்ணெய் வர்ணங்களால் தீட்டுதல், பென்ஸிலினால் வரைதல் எனப் பலவகை உண்டு.

இவ்விதமான சித்திரக் கலையை வெறுப்பின்றி ஊக்கமுடன் பலகால் கற்றுத் திறமை யெய்தினால் நமக்குப் பொருள்களை உற்று நோக்கும் சக்தியும், மனவெழுச்சியும், கைவன்மையும், கற்பனைத் திறனும் உண்டாகின்றன. சித்திரக் கலையில் கைதேர்ந்தவர் தம் வாழ்நாளில் பெரும் புகழுடைவர் என்பதில் ஐயமில்லை.

சித்திரம் ஒழுங்காக வரையத் தமக்கு வராதென்ற எண்ணம் சிலருக்கிருக்கக்கூடும். இக் கருத்துத் தவறான தாகும். எப்படிப்பட்டவருக்கும் நாளடைவில் கைப் பழக்கத்தால் சித்திரம் நேர்த்தியாக வரைய முடியும். இதனாலன்றோ,

'சித்திரமும் கைப்பழக்கம்,
செந்தமிழும் நாப்பழக்கம்'

என்றார் சான்றோர்!

T. K. சீதாலக்ஷ்மி VI-D.

எனது இலட்சியம்

நாம் இறப்பதோ திண்ணம். ஆனால் அந்த இறப்பு ஒரு இலட்சியத்தை அடையும் முயற்சியில் நேருமாயின் அது விரும்பத்தக்கது. ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும் இறைவன் படைத்ததன் நோக்கமென்ன? அல்லல் படும் மக்களுக்கு ஆறுதலளித்து உதவி புரியவன்றோ? ஆதலின் ஒவ்வொரு மனிதனும் உலகிற்குப் பணிசெய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டு, அதற்காக உழைப்பானேயாயின், அவன் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்வான் என்பதில் ஐயமில்லை!

நான் என் சகோதர மக்கட்கு உதவி புரிய விழைகின்றேன். விஞ்ஞானத்தின் மூலம் எண்ணரும் விந்தைகள் பல புரிந்து மக்களுக்கு அளிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறேன். விஞ்ஞான உலகின் ஜோதிச் சுடராய்த் திகழும் கியூரி அம்மையார் அம் மாய உலகிற்கு என்னை அழைப்பதுபோல் கனவு காண்கிறேன். நான் விஞ்ஞானியாக விழைகின்றேன்.

பூர்ணச் சந்திரன் கடலலைகளைத் தன் பால் இழுக்கின்றது. ஆகவே அதில் ஏதோ ஒரு தனிச் சக்தியொன்று மறைந்துளது. அச்சக்தியினை வேறு செயல்கட்குப் பயன்படுத்த இயலுமா என ஆராய்வேன். பெரிய பெரிய ராக்கெட்டுகளைத் தயாரித்து இதர கிரகங்களுக்குப் போகும் முயற்சியில் ஈடுபடுவேன். அங்ஙனம் சென்று

அவ்விடங்களில் மக்கள் இருப்பின் அவர்கட்கும் நமக்கும் தொடர்பு ஏற்படுமல்லவா? அதனால் கடவுளின் இரகசிய சிருட்டி விநோதங்கள் பல புலனாகும்.

வட, தென் துருவங்களை நினைத்துப் பாருங்கள். அதிக ஜன சஞ்சாரமற்ற அவ்விடங்களில் ஏன் உலகிலேயே வேறெங்கும் கிடைக்காத அளவு தங்கம் இரும்பு, நிலக்கரி போன்ற உலோக வகைகள் கிடைக்கக் கூடாது? அங்ஙனம் கிடைப்பின் உலகமே செல்வக் கடலில் மிதக்குமல்லவா?

பூமியிலே 5000 அடிகளுக்குக் கீழ் அதிக உஷ்ண சக்தி கிடைக்கின்றது. உஷ்ண சக்தியால் இயங்கும் ஆலைகள் பற்பல. அத்தகைய ஆலைகளை ஏன் பூமியின் அடியில் நிறுவக்கூடாது? அங்ஙனம் செய்தால் செலவில்லாமலேயே அதிக உஷ்ண சக்தியை நாம் பெறலாமல்லவா? "மன முண்டானால் வழியுண்டு." ரஷ்யா, அமெரிக்கா முதலிய தேசங்களில் பூமியின் அடியில் இரும்புக் கட்டிடங்கள் கட்ட முயல்கின்றனர். அங்ஙனமிருக்க இது மட்டும் ஏன் நடக்க முடியாத காரியம். நான் முயல்வேன்!

மக்களுக்கு எண்ணற்ற வியாதிகள் வருகின்றன. அவற்றுக்கெல்லாம் ஒரு முடிவுதேட நான் விரும்புகிறேன். பூமியிலே எங்கும் தாவரங்கள் மலிந்துள்ளன. அவற்றின் சாரங்கள் ஏதேனும் எனது இம்முயற்சிக்குப் பயன் தருமா என ஆராய்வேன்.

அணுசக்தியை இன்றைய உலகம் தீயநெறியில் உபயோகிக்கிறது. ஏன் அத்தகைய மாபெரும் சக்தியைக் கொண்டு நன்மை பயக்கும் செயல்களில் உலகம் இறங்கக் கூடாது?

இங்ஙனம் பல துறைகளில் நான் ஆராய்வேன். பல புதிய பொருள்களைக் கண்டுபிடிக்க முயல்வேன். இரவும், பகலும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு இவ்வுலகை மறப்பேன். விஞ்ஞான அன்னைக்கு என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன். எனது தியாகத்தினால் நன்மைகள் கிட்டுமாயின் மாந்தர் அவற்றை அனுபவிக்கட்டும். எல்லாம் வல்ல எம்பெருமான் எனது எண்ணம் நிறைவேற எனக்கு வேண்டிய அறிவையும், திறனையும் அருளுவாராக!

C. R. சந்திரா, V-A.

P. Padma, V-C.

அன்னைக்கு உதவாதவன் ஆருக்குமாகான்

திருச்செந்தூர் வேலன்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன். சூரபத்மனைச் சம்ஹாரம் செய்த திருச்செந்தூர் வேலனைப்பற்றி ‘திருப்புகழ்’ பாடுகிறது. அவன் உறைவிடங்களுள் திருச்செந்தூர்க் கடற்கரைக் கோயில் மிக அழகானது.

திருச்செந்தூர் செல்ல, திருநெல்வேலியிலிருந்து கிழக்கே செல்லும் பாதையில் கடைசி ரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். இங்கு எழுந்தருளியிருக்கும் முருகன் திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சியாகும். கடற்கரையில் சுத்த ஜலமுடைய ‘நாழிக் கிணறு’ இருக்கிறது. முருகப் பெருமான் வேலாயுதத்தால் குத்த, இக் கிணறு உண்டானதாகச் சொல்லப்படுகிறது. கடலருகில் இருந்தும் இதன் நீர் இனிய சுவையுள்ளது. சுவாமி தரிசனத்திற்குச் செல்லும் ஒவ்வொருவரும் இதில் நீராடிவிட்டே செல்வார்கள்.

திருச்செந்தூர் வேலவன் திருவுருவம் மிக அழகு வாய்ந்தது. அவன் தன் ஒரு கரத்தில் வேலைத் தாங்கி நிற்கிறான். ஒரு கையை மேலே உயர்த்தியிருப்பது ‘அஞ்சாதே, அபயம் தருகிறேன்’ என்று சொல்வதுபோல் தோன்றும். ஒரு கை தொடையின்மேல் வைத்திருப்பது ‘பக்தர்கள் இச்சிக்கும் வரத்தைத் தருகிறேன்’ என்று கூறுவது போல் இருக்கிறது. அவன் முகத்தில் கருணை ததும்புகிறது.

இக் கோயிலில் விபூதிப்பிரசாதத்தை ஒரு இலையில் வழங்குவார்கள். ‘மந்திரமாவது நீறு’ என்று ஞான சம்பந்தர் பாடியுள்ளபடி இத் திருநீற்றை அணிந்தவுடன் உடலில் உள்ள பிணிகள் எல்லாம் நீங்கும்.

இந்தியாவிலுள்ள புனித ஸ்தலங்களில் இதுவும் ஒன்று. இங்கு உள்ள இக் கோயில் புராதனமானதும் பெரியதும் ஆகும். கோயில் மேல் கடலலைகள் வந்து மோதுவது ஒரு அரிய காட்சியாகும். நாம் நம் ஆயுளில் ஒரு முறையாவது சென்று செந்தில் வேலனைத் தரிசிக்கவேண்டும்.

E. K. **பர்வதவர்த்தினி**, V-B.

T. V. Visalakshi, III-A.

ஆண்மை வேண்டும்; அகங்காரம் கூடாது

வீர சோதனை

சீக்கிய மதத்தை ஸ்தாபித்தவர் குருநானக். இப்பெரியார் கி. பி. 1469-ல் லாகூருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். இவர் கபீர்தாசரின் சீடராவார். இவர் அக்காலத்தில் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு மிகவும் பாடுபட்டார். சாதி வேற்றுமை பாராட்டக் கூடாதென்றும் இறப்புக்கு அஞ்சக்கூடாதென்றும இவர் உபதேசித்தார்.

ஒரு நாள் இவர் தம் மதத்தினரின் வீரத்தைச் சோதனை செய்யப் பேராவல் கொண்டார். அதற்காக இவர் தம்முடைய அறைவாயிற்படியை ஒரு திரையினல் நன்ருக மறைத்து விட்டுத் தம் மதத்தினரை வருவித்தார். பிறகு அக் கூட்டத்தில் ஒருவரைத் தம் அறையினுள் அழைத்துச் சென்ருர். சிறிது விநாடிகளில் வெளியிலுள்ளோர்க்கு அறையினுள் எதையோ வெட்டும் சத்தம் கேட்டாற்போலிருந்தது. தொடர்ந்தாற்போல் திரையினடி வழியாக இரத்தம் குபுகுபுவென வெளிவந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அறையிலிருந்து குருநானக் இரத்தக் கறையுடன் வெளிவந்து மற்ருெருவரை அழைத்துச் சென்ருர். மறுபடியும் முன்பு போலவே வெட்டும் சத்தம் வெளியிலுள்ளவர்களுக்குக் கேட்டது. இரத்தமும் வேகமாகத் திரையினடி வழியாக வந்து கொண்டிருந்தது. வெளியிலுள்ள சீக்கியக் கூட்டத்தினர் மிக்க கலவரமடைந்து விட்டனர். மறுபடியும் நானக் அறையை விட்டு வெளி வந்து இன்னெருவரை அழைத்தார். அவர் அறையினுள் செல்ல மறுத்து விட்டார். அவர் மட்டுமென்ன? எல்லோருமே பயப்பட்டனர். ஆனல் குருநானக் அக் கூட்டத்தைப் பார்த்து புன்னகை செய்தார். நேராகச் சென்று வாயிற்படியிலுள்ள திரையை விலக்கினர். சீக்கியரனைவரும் ஆச்சரியப் பட்டனர். அறையினுள் அழைத்துச் செல்லப்பட்ட சீக்கியரிருவரும் அவ்வறையின் ஓர் மூலையில் நின்று கொண்டிருந்தனர். இரண்டு ஆடுகள் வெட்டப்பட்டுக் கிடந்தன. மறுபடியும் நானக் அக்கூட்டத்தைப் பார்த்துப் புன்னகையுடன், "நான் உங்கள் வீரத்தை அறியவே இவ்வேற்பாடு செய்தேன். நீங்கள் இனிமேல் கோழையாக இருத்தல் கூடாது. ஒவ்வொருவரும் எந்த நிமிடத்திலும் மரணத்தை வரவேற்க வேண்டும் என்பதை அறிந்து வீரத்துடன் வாழவேண்டும்" என்ருர். ஆகவே அவர் உபதேசத்தின்படி இன்றுவரை சீக்கியர்கள் வீரத்துடன் வாழ்கின்றனர். அவர்கள் தங்களது வாளையே தெய்வமாகப் போற்றுகின்றனர். இம்மதத்தைத் தோற்று வித்துச் சிறந்த வீரமுள்ள மதமாக்கிய நானக் கி. பி. 1538-ல் காலமானுர்.

N. கங்காபாய், V-C.

இட்டுக் கெட்டார் எவரும் இல்லை

கல்வி

'இளமையிற் கல்' என்றார் ஒளவையார். 'சாந்துணையும் கல்' என்றார் வள்ளுவர். உடல் வளர்ச்சிக்கு உணவு எவ்வளவு அவசியமோ அதைப்போல் அறிவு வளர்ச்சிக்குக் கல்வி மிக்க அவசியம். "கற்க கசடறக் கற்பவை. கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது முதலியவெல்லாம் பேரறிஞர்களின் பொன் மொழிகள். ஆதலின் மானிடப்பிறவி எய்தியவர் ஓயாமற் படிக்க வேண்டும். ஊன்றிப் படிக்க வேண்டும். அப்படிப்பே ஆனந்தகரமானது, மனதிற்குச் சாந்தியளிக்க வல்லது.

"கலைமகள் இன்னும் படித்துக் கொண்டே இருக்கிறாள்" என்று நூல்கள் கூறுகின்றன. "கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்னும் பழமொழிகள் நம் நாட்டில் வழங்குகின்றன. ஆதலின் கல்வி கரையற்ற கடல் போன்றது. அளவற்ற மலை போன்றது. பெரிய கடலைச் சிறிய படகால் சிறுகச் சிறுகக் கடப்போம்; உயர்ந்த மலையைச் சிறிய தடியால் ஊன்றி ஊன்றிக் கடப்போம்; அறிவென்னும் சிறு படகின் உதவியால் முயற்சி என்னும் துடுப்பைக் கொண்டு, கரையற்ற கல்வியாகிய கடலை, புத்தகத்தை வைத்துக்கொண்டு பக்கம் பக்கமாகப் படித்துப் பயன் பெறுவோம்.

'காலை எழுந்தவுடன் படிப்பு' என்றார் பாரதியார். மேலும் நம் நாட்டுப் புலவர்களில் ஒருவர் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்றார். கல்வியோ கரையிலாதது; ஆதலால் சமயம் கிடைக்கும்பொழுதெல்லாம் படிக்க வேண்டும். இக்கரையிலாக் கல்வியைக் கற்பவனது வாழ்நாளோ மிகச் சொற்பம். அதிலும் எண்ணி, ஆராய்ந்து பார்த்தால் பிணிகள் பல. ஆதலின் "காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ள வேண்டும்." சமயம் வாய்த்தபொழுதெல்லாம் கல்வியை ஊன்றிப் பிழையறக் கற்க வேண்டும். இக்கல்வியை இடைவிடாது உழைத்துக் கற்றால், ஒழுக்கமும், ஒழுக்கத்தால் உயர்வும், உயர்வால் புகழும் அடையலாம்.

'கல்வியறிவில்லாதவர் மரம்; மரத்தினும் இழிந்தவர், என்று சொன்னாலும் பொருந்தும். மரம் வீடு, ஆலயம் முதலியன கட்டுவதற்காவது பயன்படும்; கல்வியறிவற்ற மானிட மரமோ அனலுக்கிரையாவதன்றி வேறு பயனையறியாது. ஆதலின் மனிதனை மனிதனாக்குவது கல்வியே.

செல்வத்துட் சிறந்த செல்வம் கல்விச் செல்வமே யாகும். ஏனைய செல்வங்கள் அழியுந்தன்மையன; கல்வியோ என்றும் அழியாதது. அது வெள்ளத்தால் போகாதது, வெந்தணலால் வேகாதது, கள்வராலும் அபகரிக்க இயலாதது, பிற

ருக்குக் கொடுத்தாலும் குறையாதது. கல்வியை அள்ளிக் கொடுக்கக் கொடுக்க, அது ஆற்றின் ஊற்றுப் போல் பெருகும் தன்மையது.

கல்லாதவரால் நாட்டிற்கும் பயனில்லை, வீட்டிற்கும் பயனில்லை. அவர்கள் இருந்தும் இறந்தவரே. கற்றவரின் பேச்சிலும் செயலிலும் இன்பத்தைக் காணலாம். கல்லாதவரின் நட்பினும் பகைமையே நல்லது. ஆதலின் நம் சிற்றுயிர்க்குத் துணையாகும், கல்வியை ஊன்றிக் கற்றுப் பயன் பெறுவோமாக.

M. மீனுக்ஷி, V-D.

எம் பள்ளியில் கலைத்தெய்வம்

கலைகளுக்கிருப்பிடமான பள்ளிக் கூடத்தில் கலைகளுக்கதிபதியான சரஸ்வதிதேவியின் கடாட்சம் எப்பொழுதும் இருக்கும். ஆயிரம் அன்ன சத்திரங்கள் கட்டுவதை விட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்த காரியமாம் என்று கூறியுள்ளார் அமரகவி பாரதியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்த கல்விக்குத் தலைவி கலைவாணி. ‘ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விப்பவள்’ என்று சிறப்பித்துக் கூறப்படுகிருள்.

கலைத்தேவியின் பூரண கடாட்சத்தைப் பெற்றது நம் பள்ளி. கலைக்கூடமான நம் பள்ளியில் பாரதியின் திவ்விய உருவத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்னும் எண்ணம் பள்ளி நிர்வாகஸ்தர்களுக்கு உதித்தது. அதன்படி நம் பள்ளி நண்பரான சிற்பி ஸ்ரீ K. ராஜகோபால் என்பவரிடம் கலைத்தேவியின் உருவச்சிலையைச் செய்துதரும் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டது. அவர் குறித்த காலத்தில் சிலையைச் செய்து கொடுத்தார். சிலை வருமுன்பே கலைத்தேவிக்குத் தகுதியான புனித இடம் பிரார்த்தனை மண்டபம் எனத் தேர்ந்து அவ்விடத்தில் சிறந்த வேலைப்பாடுகளமைந்த அழகிய விமானம் கட்டி முடித்தனர்.

தேவியைப் பிரதிஷ்டை செய்யும் நாள் நெருங்கியது. யாவர் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கியது. தேவியைப் பிரதிஷ்டை செய்வதற்கு இரண்டு நாட்கள் முன்னரே பிரார்த்தனைக் கூடத்தில் வேதங்களின் மங்கள ஒலி எழுந்தது. அநேக மாணவியர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்து பஜனையில் கலந்து கொண்டனர்.

அன்று சரஸ்வதி பூஜை தினம். சரஸ்வதி தேவியைப் பிரதிஷ்டை செய்ய இதைவிட மங்களகரமான தினம் வேறு உண்டோ! காலை ஐந்து மணியிலிருந்தே பள்ளி வாயிலில் நாதஸ்வரத்தின் ஒலி எழுந்

தது. உள்ளே நுழையும் பொழுதே வேத கோஷம் காதில் தேனைப் போன்று பாய்ந்தது. தேவியின் உருவம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. பளிங்குக்கல்லால் செய்யப்பட்ட புனிதத் திரு உருவம் அது. தூய மனத்தினையுடையவளுடைய தூய வெண்மை உருவம். ஆகா! அந்தப் புன்சிரிப்போடு கூடியமுகம் பூரண சந்திரனையும் தோற்கடிக்கக் கூடிய பொலிவுடன் விளங்கியது. அவள் கையிலுள்ள யாழினைக் கண்டவுடன் நம் இதய யாழினை யாரோ மீட்டும் உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. வெள்ளைக் கலையுடுத்து திவ்வியாலங்கார பூஷிதையாகத் தேவி யாவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டாள்.

கும்பாபிஷேகம் முடிந்ததும் யாவரும் பிரசாதம் பெற்று வீடு திரும்பினோம். மாலை நான்கு மணிக்கு மாணவியர் பஜனை செய்தனர். பிறகு ஸர் எஸ். வரதாச்சாரியார் அவர்கள் சிற்பி K. ராஜகோபால் அவர்களின் திறமையைப்பாராட்டி, பள்ளியின் சார்பாக அவருக்கு ஓர் அழகிய வெள்ளித் தாம்பாளத்தை அன்பளிப்பாகக் கொடுத்தார். தலைவி நன்றி செலுத்தினார்.

மறுநாள் விஜயதசமி யன்று முதல் படிவத்தினின்று ஆறும் படிவம் வரையுள்ள மாணவிகள் யாவரும் தேவியைக்கண்டு களித்தனர். ராஜாஜி முதலிய பெரியோர்களும் பள்ளிக்கு விஜயம் செய்து தேவியின் திருவுருவத்தைக் கண்டு பெருமகிழ்ச்சியெய்தினர்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட தினத்திலிருந்து ஒரு மண்டலம் பூர்த்தியான தினத்தன்று தேவிக்கு விசேஷ அர்ச்சனை செய்யப்பட்டது. அன்று ஸ்ரீ அமிர்தானந்த யோகி அவர்கள் தேவியின் பெருமையைப்பற்றி அரியசொற்பொழிவாற்றினார்.

தினந்தோறும் காலையில் பள்ளியில் பிரவேசித்ததும் முதலில் நம் கண்ணில் படுவது ஸர்வாலங்கார பூஷிதையான தேவியின் ஸ்வரூபமே. அவளைக் கண்டதும் மனம் மற்றக்கவலைகளை மறந்து சிறிது நேரம் அவள் பாதாரவிந்தங்களையே நினைத்துப் பக்தி பரசவமடைகிறது. தேவியின் சான்னித்தியத்தினால் பிரார்த்தனை மண்டபமே தனிப் பொலிவு பெற்று விளங்குகிறது. கலைத் தேவியின் நித்ய தரிசனத்தைப் பெறும் நமது பாக்கியமே பாக்கியம்!

D. சசிகலா, IV-A.

முதற் பரிசு பெற்ற கட்டுரை
(Intermediates)

K. Lalitha, III-B.

உபாயத்தாலாவது பராக்கிரமத்தால் ஆகுமா?

என் பள்ளி வாழ்க்கை

எனக்கு மிகவும் பிடித்தது என் பள்ளி வாழ்க்கையே. ஏனெனில் பள்ளி வாழ்க்கையே நம்மை வருங் காலக் குடிமக்களாகத் தயாரிக்கின்றது. மகாத்மா காந்தி, பண்டிட் ஜவாஹர், ராஜாஜி போன்ற பெரியார்கள் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தன்றோ உலக மக்கள் யாவரும் போற்றத்தக்க நிலையை எய்தினர். இந் நல்லொழுக்கங்களில் நம்மைத் தினமும் ஈடுபடச் செய்வது எது? பள்ளியேயல்லவா?

ஞானசம்பந்தர் உமாதேவியாரால் ஞானப் பாலூட்டப் பெற்று ஞானம் பெற்றதும், உலகம் போற்றும் வள்ளுவரின் அவதார ஸ்தலமுமான திருமயிலையில் வள்ளல் சிவசாமி அய்யரால் நிறுவப்பெற்றதும், மாளிகையை யொத்ததுமான இப் பள்ளியில் படிக்கும் மாணவிகள் பெரும் பாக்கியசாலிகளே.

இப் பள்ளி நமக்கு நற்பண்புகள் படியவும், தெய்வ பக்தி ஓங்கவும் கோவிலைப் போன்று புனிதமாயுள்ளது. அறிவு வளர்ச்சியுறப் போதனசாலையாக உள்ளது. இளநெஞ்சுகளில் தெய்வ பக்திக்கான விதைகளை ஊன்ற சத்சங்கமுளது. கலை வளர்ச்சியில் ஊக்கம் ஏற்பட ஆண்டுக்கொரு முறை நாடகம் நடிக்கப்படுகிறது. உடல் வன்மை பெறப் பிரதி தினமும் மாலையில் விளையாட்டும், வருடக் கடைசியில் விளையாட்டுப் பந்தயமும் உள்ளன. வாழ்க்கைக்கு இன்றியமையாத சமையற் கலையையும் பயிற்றுவிக்கிறது.

ஆகையால் இப்போதும், என் பிற்கால வாழ்க்கையிலும், எப்போதும் பயன்படத்தக்க இத்தகைய நற்பண்புகளைப் பயிலுவிக்கும் பள்ளியை நான் மறக்கவே முடியாது. இத்தகைய சிறந்த பண்புகளைச் சிறு வயதிலேயே வளர்த்து நன்மை யளிக்கும் பள்ளிகள் நம் நாட்டில் தோன்றி அறியாமைப் பிணியை அகற்றின், நாடு முன்னேற்றமடைந்து, உலகில் முதன்மையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

M. விசாலாக்ஷி, IV-B.



M. Kamala, VI-B.

மூன்று

என் தம்பி ஒவ்வொரு நாளும் நான் பள்ளிக்குப் புறப்படும்போது என் கால்களைக் கட்டிக்கொண்டு "அக்கா, எனக்கு மூன்று மிட்டாய், மூன்று சாக்லேட், மூன்று பலப்பம் வாங்கி வர வேண்டும்" என்று தொல்லைப்படுத்துவான். தன் இரு கைகளிலும் நிறைய மிட்டாய்களை வாங்கிக்கொண்ட பிறகும், தன்னிடம் மூன்றுதான் இருப்பதாக அவன் 'சாதனை' செய்வான். அந்த மூன்றின் மர்மம் என்ன என்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

நம் தாய் நாட்டுக் கொடி மூவர்ணமுடையது. தமிழகம் மூன்று பிரிவினைகளையுடையது. அதனை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் அரசு புரிந்தனர். நம் தாய்மொழியாகிய 'தமிழ்' மூன்றெழுத்துக்களால் ஆனது. அதன் இயல்பாகிய 'இனிமை'க்கும் எழுத்துக்கள் மூன்றே. தமிழ் வேதமாகிய 'குறள்' மூன்றெழுத்துக்களையுடையது. அதன் உட்பிரிவுகளும் மூன்றுதான். அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. 'அறம்,' 'பொருள்,' 'காமம்' என ஒவ்வொரு பாலும் மூன்றெழுத்தால் ஆனதுதான்.

'அன்பு' 'அறிவு' 'வீரம்' 'சீலம்' 'வாய்மை' 'கருணை' ஆகிய மூன்றெழுத்தால் அமைந்த அனைத்தையும் உடையவனே உயிருள்ளவனாகக் கருதப்படுவான். அந்த 'உயிரும்' மூன்றெழுத்து, 'உடலும்' மூன்றெழுத்து. அதைப் பேணுவதற்கு நாம் உட்கொள்ளும் 'உணவும்' மூன்றெழுத்து. உணவருந்தி 'சக்தி' பெற்று 'பயன்' கருதாது உழைத்து 'பக்தி'யையே மார்க்கமாகக்கொண்டு 'இறுதி'யில் 'முக்தி' அடையலாம். 'முருகா!' மூன்றெழுத்தின் மகிமையை இப்பொழுதுதான் உணருகிறேன்.

R. அன்னபூரணி, IV-C.

J. Ramani, III-D.

தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது

பேரறிஞர் பெர்னுட்ஷா

"இலக்கிய வானிலே ஒளி வீசும் தாரகை! புண்பட்ட சமுதாயத்தைச் சீர்திருத்த வந்த மருத்துவர்! அரசியல் அறிவாளி! நகைச்சுவை மன்னர்! உலகம் போற்றும் நாடகாசிரியர்!" என்றெல்லாம் அறிஞர்களால் புகழப்பட்டவர் பேரறிஞர் பெர்னுட்ஷா!

இவர் 1856-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26-ந்தேதி அயர்லாந்திலுள்ள டப்ளினில் பிறந்தார். ஷாவின் தந்தை ஒரு குடிகாரர்; அதனுல் அவரது குடும்பம் எப்பொழுதும் வறுமையிலேயே உழன்றது. பெர்னுட்ஷாவின் தாயார் இசையில் தேர்ச்சியுடையவர்.

பெர்னுட்ஷா மற்றச் சிறுவர்களைப் போலப் பள்ளிக்குச் சென்ருர். ஆனுல் அவர் அங்கு அதிகமாகக் கற்கவில்லை. அவர் அதிகமாகக் கற்றதெல்லாம் இந்தப் பரந்த உலகமாகிய பள்ளியில்தான். அவர் இறக்கும்வரை தாமாகவே படித்து வந்தார். முயற்சியால் முன்னேறியவர். பள்ளிப் படிப்பு அதிகமில்லாமல் உலகப் புகழ் பெற்றவர்.

பெர்னுட்ஷா 1879-ல் அதாவது தமது 25வது வயதில் தொடர்ச்சியாக ஐந்து நாவல்கள் எழுதினுர். அவற்றுள் சிறந்தவை 'கலைஞரிடையே காதல்', 'அறிவின் அபேத வாதி' என்பவைகளாகும். இவர் பிற்காலத்தில் அதிகமாக நாடகங்களைத்தான் எழுதினுர்.

ஷாவைச் சமயமற்றவர் என்று பலர் கூறுகின்றனர். அது தவறு. அவருக்கென்று சில கொள்கைகள் இருந்தன. அவையே அவருடைய சமயமாகும். ஷா நன்ருக உழைப்பார். அவர் இறக்கும்வரை தமது உடல் நலம் குன்ருமலே பார்த்துக் கொண்டார். மேனுட்டில் மதுக் குடிப்பதும், மாமிசம் புசிப்பதும் சர்வ சாதாரணமான வழக்கமாகும். ஆனுல் ஷா குடிப்பதையும், மாமிசம் புசிப்பதையும் அறவே வெறுத்தார். அவர் வாயில்லா ஜீவன்களிடத்தே அன்பு கொண்டார்.

இப்பேரறிஞர் 1950-ஆம் ஆண்டு உயிர் நீத்தார். அவரது மரணச் செய்தியைக் கேட்டு வருந்தாதார் கிடையாது. உலகப் புகழ் பெற்ற இப் பேரறிஞரின் நூல்களில் சில வற்றையேனும் நாம் கட்டாயம் படித்து இன்புற வேண்டும்.

K. சீதாலக்ஷ்மி கிருஷ்ணன், IV-D.

R. Kanakavalli, IV-C.

பொங்கல் விழா

உழைத்து அலுத்த உள்ளத்திற்கு உவகை அளிப்பவை விழாக்கள். இக்காரணம் பற்றியே பண்டைக் காலம் முதல் இன்றுவரை எல்லா நாட்டினரும் பற்பல விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். பொங்கல் விழா, நம் நாட்டவர் சிறப்பாகக் கொண்டாடும் விழாக்களுள் ஒன்று.

பயிர்த்தொழில் ஆனி, ஆடி மாதங்களில் தொடங்கி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் முடிவு பெறும். பயிர்கள் வளர்வதற்கு மழையும், வெப்பமும் தேவை. மழை தரும் தெய்வம் வருணன். வெப்பத்தைத் தரும் தெய்வம் சூரியன். அறுவடை செய்த நெல்லைச் சூரியன், வருணன் என்ற இரண்டு தெய்வங்களுக்கும் படைக்கப்படும் நாளே போகி எனப்படும்.

மார்கழி மாதக் கடைசி நாளன்று இந்திரனை வணங்கும் விழா நடைபெறுகிறது. இந்திரனுக்குப் போகி என்ற பெயரும் உண்டு. அன்று அதிகாலையில் வீட்டின் முன்பு எரி மூட்டி அதில் பழைய முறம், கூடை, துடைப்பம் முதலியவைகளைப் போட்டு அதனைச் சுற்றிப் பெரியவரும், சிறியவரும் பறை கொட்டியும், பாட்டுப்பாடியும் மகிழ்வர்.

மறு நாளாகிய தைத் திங்கள் முதல் நாளன்று பொங்கல் விழா, கொண்டாடப்படும் அன்று வீட்டை. மாக் கோலங்களாலும், செம்மணிட்டும் அலங்கரிப்பர். முற்றத்தினிடையில் வடக்குத் தெற்கில் நீண்ட பள்ளம் வெட்டி, அதிலுள்ள மண்ணைக் கொண்டு ஒன்பது உருண்டைகளாக்கி, மும்மூன்று கொம்மைகள் அமைத்து அப்பள்ளத்தை மூன்று அடுப்புக்களாக்கி உபயோகிப்பர். மூன்று புதுப்பானைகளில் புது அரிசியைச் சமைப்பர். சோறு பொங்குகையில் பெரியவரும், சிறியவரும் "பொங்கலோ பொங்கல்" என்று கூறுவர். பொங்கிய சோற்றைப் பூசணி இலையிலிட்டுச் சூரியனுக்குப் படைப்பர்.

தைத்திங்கள் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் என்று சொல்லப்படும். 'மாடு' என்னும் சொல்லிற்குச்'செல்வம்'என்று பொருள். மாடுகளை நன்றாகக் கழுவி அதன் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, நெற்றிக்கும், கழுத்திற்கும் சதங்கை கட்டி அலங்கரிப்பர். பொங்கல் இட்டு அதை மாட்டுக்குக் கொடுத்து மகிழ்வர்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் கன்றுப் பொங்கல் எனப்படும். உழவர்க்குக் கன்றுகள் எதிர்காலச் செல்வங்கள் ஆதலால் அன்று பொங்கலிட்டுச் சோற்றைக் கன்றுக்குப் போடுவர்.

ஆனி, ஆடி மாதங்கள் முதல் தை மாதம் வரையில் தங்கள் தொழிலிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்த இந்த உழவர்கள் அந்தத்

தன் வீட்டு விளக்கென்று முத்தம் இடலாமா?

தொழில் முடிந்தவுடனே தங்கள் உறவினரையும், நண்பர்களையும் காணும் தினம் ஆதலால் அன்று காணும் பொங்கல் எனப்பட்டது. சிறுவர், சிறுமியர் தத்தம் நெருங்கிய உறவினரைக் கண்டு, வணங்கி, நல்வாழ்த்துக்களும், பரிசுகளும் பெறுவர். மார்கழி மாதக்கடைசி நாளும், தை மாதம் முதல் மூன்று நாட்களும் பொங்கல் விழா இவ்வாறு தமிழ்நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதை இன்றும் காண்கிறோம்.

J. மீனாக்ஷி, III-A.

மலைக் கோட்டை

திருச்சிராப்பள்ளி, சென்னையிலிருந்து சுமார் 250 மைல் தொலைவில் இருக்கிறது. அங்குச் சிராப்பள்ளி—மலைக்கோட்டை உள்ளது. அதன் வாயிற் கோபுரம் தெற்கு நோக்கியும், அதனுள் மலைமேல் இருக்கும் கோவில் கிழக்கு நோக்கியும் உள்ளன. கோட்டைக்குள் நுழைந்தவுடன் இரு புறத்திலும் பலவிதக் கடைகள் உண்டு. அவற்றைக் கடந்து சென்றால் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. இப்பிள்ளையார் வரப்பிரசாதி.

இங்கிருந்து படிகள் ஏறி, மேலே செல்லவேண்டும். சுமார் 30 படிகள் ஏறியவுடன் நூற்றுக் கால் மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் பல சங்கீதக் கச்சேரிகள் நடைபெறுவது வழக்கம். பல்லவர் குகை ஒன்று இங்கு உண்டு. அதில் சில கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. அதற்கு எதிராக மணிக்கூண்டு இருக்கிறது. இங்கிருந்து மேலும் படியேறிப் போனால் உச்சியில் பிள்ளையார் கோவில் உள்ளது. பிள்ளையார் மலை உச்சியில் கோயில் கொண்டிப்பதால் அதற்கு 'உச்சிப் பிள்ளையார் கோவில்' என்ற பெயரும் உண்டு.

மலைக் கோவிலிலுள்ள ஈசனின் பெயர், 'மாத்ரு பூதேச்வரர்' என்பது. அம்மையின் பெயர் 'சுகந்த குந்தளாம்பிகை' என்பது. மாத்ரு பூதேச்வரர் என்னும் பெயரைத் தமிழ்ப்படுத்தி, 'தாயுமானவர்' என்பர். முன்பு ஒரு செட்டிப் பெண்ணுக்கு அவர் தாயாக இருந்து மருத்துவம் செய்ததால் தாயுமானவர் எனப் பெயர் வழங்கலாயிற்று என்றும் சொல்லுவர்.

அக் கோவில் சித்திர வேலைப் பாடமைந்தது. ஒரு முகமும், எட்டு உடலுமாய் குரங்கின் சித்திரம் ஒன்று உள்ளது. இம் முகம் எட்டு உடலுக்கும் பொருத்தமாயிருக்கும். அதனருகே பசுவும், யானையும் எதிரெதிராக நிற்பதுபோல் ஒரு சித்திரம் உள்ளது. ஆனால் இரண்டிற்கும் ஒரே தலை. ஒருபுறமிருந்து

பார்த்தால் யானை தன் துதிக்கையைத் தூக்கிக்கொண்டிருப்பது போன்றும், மறு புறமிருந்து பார்த்தால், பசுவின் தலை அண்ணாந்திருப்பது போன்றும் தோன்றும். உல்லாசப் பிரயாணமாக வருபவர்களின் மனத்திற்கும், கண்களுக்கும் இங்குள்ள சித்திரங்கள் விருந்தாக அமையும்.

V. உமா, III-B.

தாய் மொழிப்பற்று

ஒரு சமயம் ஜெர்மனியை கெய்ஸர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் அங்குள்ள பிறதேசத்து மக்களும் ஜெர்மன் மொழியையே பேசவேண்டும் என்றும், தங்கள் தாய் மொழியைப் பேசவும், எழுதவும் கூடாதென்றும் கட்டளையிட்டார். ஆயினும் சிலர் தங்கள் தாய்மொழியையே யாரும் அறியாதவாறு பேசிவந்தனர்.

ஒரு சமயம் கெய்ஸரின் மனைவியார் தன் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களையும், மற்றுமுள்ள பொது இடங்களையும் சுற்றிப்பார்த்தார். அப்போது அங்குள்ள ஒரு வகுப்பிற்குச் சென்றார். அவ்வகுப்பில் உள்ள மாணவர்களைப் பல கேள்விகள் கேட்டார். எல்லோரும் விடை கூறினர்கள். ஓர் ஏழைப்பெண் மிகவும் புத்திசாலியாக இருந்தாள். அவளைக் கெய்ஸரின் மனைவியாருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் அவளிடம் சென்று, 'உனக்கு என்ன வேண்டுமோ கேள், தருகிறேன்' என்று அன்போடு கூறினார். அதற்கு அம் மாணவி, 'தாயே, எங்கள் தாய் மொழியை நாங்கள் எல்லோரும் சுதந்திரமாகப் பேசும் உரிமையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றாள். ஆ! என்னே அச்சிறுமியின் தாய் மொழிப்பற்று! அச்சிறுமியைப்போல் நாமும் நம் தாய் மொழியாகிய தமிழினைப் போற்றி வளர்க்க வேண்டும்.

G. ராதா, III-C.



C. V. Ramani, I-C.

நோபெல் பரிசுகள்

ஐரோப்பாவில் இருக்கும் ஸ்வீடன் தேசத்தில் ஆல்பர்ட் பெர்ன் ஹார்ட் நோபல் என்ற ஒரு விஞ்ஞானி இருந்தார். அவர்தான் 1866-ம் வருஷம் டைனமைட் என்ற வெடி மருந்தையும், மற்ற புகையற்ற வெடி மருந்துகளையும் கண்டு பிடித்தார். அதன் மூலம் அவர் ஏராளமான பணத்தைச் சம்பாதித்து வைத்தார். அவர் அத் தொகையைக் கொண்டு 'நோபல்' பரிசுகளை வழங்க ஏற்பாடு செய்தார்.

அத் தொகையிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு வருஷமும் ஐந்து பரிசுகள் வழங்கப் படுகின்றன. விஞ்ஞானம், ரஸாயனம், உள நூல், மருத்துவம் இவற்றில் தலைசிறந்தவர்களுக்கு இப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இவற்றில் விசேஷம் என்னவென்றால் ஒரு சமாதானப் பரிசும் வழங்கப்படுகிறது. உலகத்தின் சமாதானத்திற்காக உழைப்பவர்க்கு இப் பரிசு வழங்கப்படுகிறது. சமாதானப் பரிசை நார்வே தேசத்து 'லெஜிஸ் லேடிவ்' சபையார் தீர்மானிக்கிறார்கள். மற்ற நான்கு பரிசுகளும் ஸ்வீடன் தேசத்து மருத்துவ சபையார் தீர்மானிக்கிறார்கள்.

இப் பரிசு மேல் நாடுகளில் பெர்னாட்ஷா, சேம்பர்லின், சர்ச்சில் முதலிய பெரியோர்கள் பெற்றுள்ளார்கள். நம் நாட்டில் கலைக்கு ரவீந்திரநாத் தாகூருக்கும், விஞ்ஞானத்திற்கு ஸர். ஸி. வி. ராமனுக்கும், ஜகதீஸ் சந்திரபோஸுக்கும் அப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

A. லக்ஷ்மி, III-D.

இசை வளர்த்தவர்கள்

நம் தமிழ் நாடு தொன்றுதொட்டு பல கலைகளிலும் சிறப்புற்று விளங்குகின்றது. சிற்பக்கலை, சித்திரக் கலை, நாட்டியக் கலை, சங்கீதக் கலை முதலிய பல கலைகளையும் முற்காலத்து அரசர்களும், பல பெரியோர்களும் ஆதரித்து வளர்த்து வந்துள்ளனர்.

நம் முன்னோர்கள் துன்பத்தை மறந்து இன்பமாய் இருக்கப் பல கலைகளில் பயிற்சி பெற்றனர். கதைகளி, தெருக்கூத்து முதலிய பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டனர். பின்னர் நாட்டியம், நாடகம், இசை முதலியன மக்களுடைய இன்ப வாழ்வில் இடம் பெற்றன. இவை பெரும்பான்மையான மக்களின் மனதைக் கவரக் கூடியனவாய் இருந்தன. முற்காலத்தில் அரசர்கள் இக் கலைக

ளுக்குப் பேராதரவளித்தனர். இவற்றுள் யாவரும் ' ரசிக்கக்கூடியது இசையே. இசையில்லாவிடில் நாட்டியம் போன்ற கலைகள் சோபிக்காது.

அரசர்களுடைய ஆதரவைப் பெற்ற இக் கலையைப் பலர் பயின்று பாடல்களையும் இயற்ற முற்பட்டனர். இப்பாடல்கள் இறைவனுடைய புகழைப்பற்றியதாகவும், அரசனுடைய கீர்த்தியைப் பற்றியதாகவும் இருந்தன.

இசையை வளர்த்த பல பெரியோர்களுள் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரி, சுவாதி திருநாள், புரந்தரதாசர் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளனர். சுவாதி திருநாள் ஓர் அரசராவர். இவர் இக் கலையை ஆதரித்ததோடல்லாமல் தாமே இக் கலையில் சிறந்த தேர்ச்சியும் பெற்றிருந்தார். இவர் இறைவன் மேல் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் சிறந்த ராம பக்தர். இவருடைய பாடல்கள் உருக்கமானவை. பொருள் செறிந்தவை. இப்படிப் பட்ட பெரியோர்களால் இயற்றப்பட்ட பாடல்களையே நாம் இப்பொழுது கற்கின்றோம். இவர்களுடைய பாடல்களை அழியாமல் காப்பாற்றுவதே, நாம் இவர்களுடைய புகழை நிலை நிறுத்துவதற்கு ஏற்ற வழி.

S. வைதேகி, III-E



T. N. Kamala, VI-A.

நயத்திலாகிறது பயத்திலாகாது

பல்லவர்கள்

பல்லவர்கள் தென்னிந்தியாவை சுமார் மூன்று நூற்றாண்டுகள் கீர்த்தியுடன் அரசாண்டு வந்தனர். பராக்கிரமம் மிக்க இவர்களுடைய ஆட்சியில் பல்லவ ராஜ்யம் விரிவடைந்து மேன்மை பெற்று விளங்கிற்று. சென்னைக்குச் சுமார் ஐம்பது மைல் தூரத்திலிருக்கும் காஞ்சீபுரம் பல்லவ ராஜ்யத்தின் தலைநகரம். பல்லவ அரசர்களுள் மேன்மை பெற்ற அரசர் மஹேந்திரவர்மர். அவர் முதலில் சமண மதத்தைத் தழுவி இருந்தார். சைவசமயாசாரியார்களில் ஒருவரான அப்பர் சுவாமிகளால் அவர் சைவமதத்திற்கு மாற்றப்பட்டார். நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய குளங்கள் அநேகம் இவ்வரசரால் வெட்டப்பட்டன. காஞ்சீபுரத்திற்கு அருகில் உள்ள "மஹேந்திர வாடி" என்னும் கிராமம் அவருடைய பெயரால் ஏற்பட்டதாகும். அவர் மலைகளைக் குடைந்து பல கோவில்களை அமைத்தார்.

மஹேந்திரவர்மருக்குப் பிறகு அவர் புதல்வர் நரசிம்ம வர்மர் பட்டத்திற்கு வந்தார். அவர் ஒரு சிறந்த வீரர். அவர் தமது காலத்தில் தென்னிந்தியாவில் இருந்த சேர, சோழ, பாண்டிய, சாளுக்கிய அரசர்களைப் போரில் தோற்கடித்தார். அவர் மற்போரில் சிறந்து விளங்கியதால் 'மகாமல்லர்' என்ற பட்டப்பெயர் பெற்றார். அவர் மகாமல்லபுரம் என்னும் துறைமுகப் பட்டினத்தைத் தோற்றுவித்தார். அதற்குத் திருக்கடன்மல்லை என்ற பெயரும் வழங்கி வந்தது. அது இப்பொழுது மகாபலிபுரம் எனக் கூறப்படுகிறது.

நரசிம்மவர்மர் பாறைகளைக் குடைந்து பல கோயில்களைக் கட்டினார். அவைகளுள் மிகச் சிறந்த சிற்பவேலைப்பாடுகள் அமைந்தவை ஏழு கோயில்கள். இப்போது அவைகளுள் ஒன்று கடற்கரையில் இருக்கிறது. அதுதான் கடற்கரைக் கோயிலாகும். மற்றவை கடலினுள் மூழ்கிவிட்டன. அவையன்றி அவ்வூரில் ஐந்து ரதங்கள் உள்ளன. அவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாறையைக் குடைந்து செய்யப்பட்டதாகும். அவைகள் பஞ்ச பாண்டவ ரதங்கள் எனப்படுகின்றன. உண்மையில் அவைகள் ரதங்கள் அல்ல, கோயில்களே ஆகும்.

சென்னைக்கு அருகிலுள்ள இவ்வூருக்கு நாம் சென்றால் நம் முன்னோர்களுக்குச் சிற்பகலையில் இருந்த ஆர்வத்தை நன்கு அறியலாம்.

D. ஹேமாவதி, II-A.

நான் கண்ட திருவிழாக் காட்சி

அன்று ஒரு நாள் நான் கோயிலுக்குச் சென்றேன். அங்கு நான் சுலபத்தில் சுவாமியைத் தரிசிக்க இயலவில்லை; ஒரே ஜனத்திரள். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் எல்லோரும் கூடி சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர்.

சிறுமிகள் கையில் பலவிதமான தின்பண்டங்கள் இருந்தன. அவர்கள் அதை மிகவும் ரசித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அநேக கடைகள் அங்கு இருந்தன. பல சிறுமியர் தம் தாயிடம் தமக்கு வேண்டியதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சில தாய்மார் தங்கள் குழந்தைகளுக்குத் தின்பண்டம் வாங்கிக் கொடுத்துக்கொண்டிருந்தனர். இவ்விதம் அநேக காட்சிகள் காணப்பட்டன.

நான் சென்ற கோவில் எந்த ஊரில் உள்ளது எனத் தெரியுமா? அதுதான் சோழ நாட்டில் உள்ள தஞ்சையில் இந்தியாவிலேயே சிறப்பு வாய்ந்த பொன்னி நதி ஓடும் தஞ்சாவூரில் தான் உள்ளது வானளாவி நிற்கும் உயர்ந்த கோயில் கோபுரங்களையுடைய பிரசித்தி பெற்ற பிரகதீஸ்வரர் ஆலயத்தில் திருவிழா அன்று.

பூசாரிகள் அநேகர் துரிதமாக சுவாமிக்கும், அம்மனுக்கும் அலங்காரம் செய்துகொண்டிருந்தனர். அநேக ஆபரணங்கள் பட்டாடைகள் அம்மனுக்குச் சாத்தியிருந்தன. அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக விளங்கிற்று. விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. என்ன அற்புதம்! கடவுளைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதவில்லை. ஆயிரம் கண்கள் வேண்டும்போல் இருந்தது என்றால் எவ்வளவு அழகாக அன்று ஜோடனை கடவுளுக்கு அமைந்திருக்க வேண்டும் என நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

ஜோடனை முடிந்தது. ஆட்கள் சுவாமியைத் தூக்கிக் கொண்டு வீதியை வலம் வந்தனர். ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் அருச்சனைக்குத் தேங்காய், பழம், சூடம் இவைகளைக் கொணர்ந்து தீபாராதனை செய்தனர். பலர் பலவிதமான ஆடைகளையும் சுவாமிக்குப் போர்த்தினர். இவைகளையெல்லாம் ரசித்துக் கொண்டு வந்தேன். திடீரென்று ஓர் மின்னொளி கண்டேன்! பட்பட் என்ற சப்தமும் உண்டாயிற்று. மயக்கத்திலிருந்து எழுந்தவள் போல் அருகிலிருந்தவரிடம் என்ன இப்பொழுது நடந்தது என்று வினவினேன். அதற்கு அவர் 'ஒன்றுமில்லை வாண வேடிக்கை ரொம்ப அழகாய் இருந்தது' என்றார். பல்லக்குகள் நகர்ந்து சென்றன ஜனங்களும் தங்கள் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். நானும் கூட்டத்திலிருந்து விடுவிக்கப்பெற்றவளாய் வீடு நோக்கிச் சென்றேன். மறுபடியும் இந்தத் திருவிழா எப்பொழுது வரும் என்று ஆவலாய்க் காத்துக் கொண்டு இருக்கிறேன்.

M. R. கல்பகம், II-B.

முதற் பரிசு பெற்ற கட்டுரை
(Juniors)

பனை நிழலும் நிழலோ? பகைவர் உறவும் உறவோ?

மரியாதை

ஆசிரியர்களிடத்தும், பெரியோர்களிடத்தும் மரியாதையுடனும் அன்புடனும் பழகவேண்டும். பிள்ளைகள் பெற்றோர்களிடம் எதிர்த்துப் பேசுதல் அழகல்ல. பெற்றோர்கள் செய்யும் நன்மைகளுக்கெல்லாம் விசுவாசம் காட்டவேண்டும். பெற்றோர்களுக்கும், மற்ற பெரியோர்களுக்கும் சமமாக எங்கும் உட்காருவது மரியாதையாகாது. அவர்கள் பிறரிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சிறுவர்கள் குறுக்கே பேசுதல் கூடாது. வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை உபசரிக்கவேண்டும். பெரியவர்கள் கொடுக்கும் பொருள்களை இருகைகளாலும் வாங்கிக் கொள்ளுதல் வேண்டும். பிறரிடம் பேசுகையில் தணிந்த குரலில் பேசுவது நல்லது. வயதானவர்களுக்கு நம்மால் முடிந்த உதவி செய்யவேண்டும். தினமும் ஒரு நற் செய்கையையாவது செய்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

ஒரு நாள் ஒரு குருட்டுக் கிழவன் தெருவில் தள்ளாடியபடி போய்க் கொண்டிருந்தான். அவன் தெருவின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செல்லவேண்டியிருந்தது. அவனுக்குக் கண் பார்வை குன்றியிருந்ததால் தெருவின் குறுக்கே போகத் துணியவில்லை. தயங்கியபடியே நின்று கொண்டிருந்தான். அப்போது பல சிறுவர்கள் அவ்வழியே சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவரும் அக்கிழவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. கடைசியில் ரங்கன் என்னும் சிறுவன் அவ்வழியே வந்தான். அவன் இளகிய மனமுடையவன். கிழவன் தயக்கத்துடன் நிற்கும் காரணத்தை அறிந்து அவனிடம் இரக்கங் கொண்டான். அவனைத் தன் கையைப் பிடித்துக் கொள்ளும்படிச் சொல்லி மெதுவாக அழைத்துச் சென்று தெருவின் மறு பக்கத்தில் விட்டான்.

நீங்கள் யாருக்காவது இவ்வித உதவி செய்ததுண்டா? இதுவரை செய்யாவிடினும், இனியாவது செய்யுங்கள்.

L. S. சகுந்தலா, II-C.

S. Kalavathi, II-D.

ஒரு பிடி கடுகு

கௌதம புத்தர் கருணையுடையவர். எந்த உயிர் வருந்தினுலும் அவர் மனம் வருந்தும். ஒருநாள் அவர் ஒரு நதிக்கரையில் தங்கினர். அவரைத் தேடிக்கொண்டு ஒரு பெண் வந்தாள். அவள் பெயர் கௌதமி. அவள் கையில் ஒரு இறந்த குழந்தை இருந்தது.

அம்மாது புத்தர் எதிரில் அசையாமல் நின்ருள். விம்மி விம்மி அழுதாள். அழுதுகொண்டு நின்ற கௌதமியைப் புத்தர் பார்த்தார். "அம்மா, ஏன் அழுகிருய் சொல்" என்ருர். அவருடைய உருக்கமான உரையைக் கேட்ட கௌதமி, "ஐயா, இது என் குழந்தை. இது ஒரு மரத்தின் கீழ் விளையாடிக் கொண்டிருந்தது. எதிர்பாராதவிதமாக ஒரு பாம்பு கடித்துக் குழந்தை இறந்துவிட்டது. எப்படியாவது என் மகனை எழுப்பித்தரவேண்டும்" என்று வேண்டினுள்.

"ஐயோ பாவம்! உன் குழந்தையை எழுப்பித்தருவதற்கு மருந்து வேண்டுமே! அது செய்யக் கடுகு வேண்டும். நீ போய் யார் வீட்டிலிருந்தாவது ஒரு பிடி கடுகு கொண்டுவா. ஆனல் ஒருவரும் சாகாத வீட்டிலிருந்து வாங்கிவா. எப்பொழுதாவது, யாராவது ஒருவர் செத்திருந்தாலும் அந்த வீட்டிலிருந்து கடுகு வாங்காதே" என்ருர்.

அவர் கூறிய மொழிகளின் கருத்தை அவள் முற்றும் உணரவில்லை. தன் மகன் உயிர் பெற்றெழுந்திருக்க வேண்டும் என்னும் ஒரே எண்ணத்துடன் மிக வேகமாகச் சென்ருள். பக்கத்திலிருந்த ஊருக்குள் நுழைந்து ஒரு வீட்டிற்குச் சென்று கொஞ்சம் கடுகு கேட்டாள். அவ்வீட்டுப்பெண் கொண்டு வந்தாள். அப்போது கௌதமி அவளைப் பார்த்து, "இந்த வீட்டில் எப்போதாவது, யாராவது இறந்ததுண்டா?" என்று கேட்டாள். அதற்கு அவள், "ஒரு மாதத்திற்கு முன் என் தந்தை இறந்து விட்டார்" என்ருள். "ஆனல் கடுகு வேண்டாம்" என்று திரும்பிவிட்டாள். கௌதமி வேருெரு வீட்டிற்குச் சென்று கடுகு கேட்டாள். கடுகு கொண்டுவந்த அவ்வீட்டுக் கிழவியைப் பார்த்து, "உன் வீட்டில் எப்போதாவது யாராவது இறந்ததுண்டா?" என்ருள். அதற்கு அவள், "ஐயோ, சென்ற வருஷம் என் கணவர் இறந்தார். இவ்வருஷம் என் மகன் இறந்தான்" என்ருள். அங்கும் அவள் கடுகு வாங்கவில்லை.

இப்படி, கௌதமி பல வீடுகளிலும் சென்று கேட்டும், எவரும் இறவாத வீட்டுக் கடுகு அவளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே அவள் புத்தரிடம் திரும்பிச் சென்று, "சுவாமி, சாவில்லாத வீடு எங்கு

யில்லை" என்றாள். அதற்குப் புத்தர், "அப்படியானால் அவர்களையும் எழுப்பித்தானே ஆகவேண்டும்? அது முடியும் காரியமா" என்றார். பின்புதான் கௌதமி மரணத்தை மாற்ற முடியாது என்னும் உண்மையை உணர்ந்தாள்.

A. சரஸ்வதி, II-D.

பாரதி சொரூபம்

மென்மையான உயர் குலத்தில் பிறந்த அழகிய வீரம் பொருந்திய கண்களையும் வாளாயுதம் போன்று வளர்ந்திருக்கும் மீசையையும் உடையவர் பாரதியார். கீழ்மையான ஒருவனுக்கு அடங்கி நின்று அடிமையாக வாழ்பவர்களை இகழ்ந்து பேசி அவர்களுடைய அடிமை நிலையை மாற்றிடுவார்.

ஜாதிகள் பொய் என்று கூறுவார். எவ்விடத்திலும் மக்களாகிய நாம் யாவரும் சரிநிகர் சமானமே என்று முரசு கொட்டுவார். வீதிகளில் கவி பாடுவது அக்காலத்தில் கிடையாது. அவர் வீதியில் கவிகள் பல பாடி, வீரமும் மகிழ்ச்சியும் பொங்கச் செருக்குடன் செல்வார்.

பண்டிதர்கள் அனைவரும் மேற்கொண்டுள்ள தமிழை, நம் நாட்டில் பசுவைக்கொன்று கீழ்மையாக வாழும் பாமரர் என்று கூறப்படுபவர்களும் பெறும்படிச் செய்தார். பெண்கள் நிமிர்ந்து நடக்கப் பேதமில்லா வாதங்களைச் செய்தார்.

இவர் தீரமுடையவர். கல்வி அறிவிற் சிறந்தவர். புதுமையையும் எதிர்கால நிகழ்ச்சிகளையும் ஒருவாறு அறிந்தவர். கடவுள் அருளினால் கவி பாடும் புலமை பெற்றவர். இவரது தோற்றம், வீரமும் சுதந்திர சக்தியும் சேர்ந்து இவரைப் போல் வேடம் புனைந்து வந்துள்ளது என்று சந்தேகப்படும்படி இருக்கும்.

இவர், மங்கி அழிந்து போகும் நிலையிலிருந்த தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும், புத்துயிர் பெறக் கூடிய வேகத்தை அளித்தார். பாரதியாரின் புகழ் எங்கும் பொங்கிப் பெருகி வரவேண்டும். அவர் போற்றி வந்த சிறந்த தமிழ் யாவருக்கும் பயன்படவேண்டும். தமிழ் படிப்பது அவமானம் என்னும் காலம் மாறித் தமிழே தெய்வம் என்னும் நிலை வரவேண்டும்.

P. R. சாந்தா, II-E.



M. S. Rajalakshmi, I-A.

தாமிரபரணியின் சுய சரிதை

என் பெயர் தாமிரபரணி. தாமிரம் (செம்பு) என்னும் உலோகத்தின் சத்து என்னிடம் மிகுதியாகக் கலந்திருப்பதால் எனக்கு இப்பெயர் வந்தது. நான் மேற்கு மலைத் தொடரில் அகஸ்திய மலையில் பிறந்தேன். நான் மற்ற ஆறுகளைப்போல் சிறிது காலம் நீரோட்டத்துடன் இருந்து பிறகு வற்றி விடமாட்டேன். ஆண்டு முழுவதும் நீரோட்டத்துடன் காட்சி அளிப்பேன். திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் விளைவுககு ஆதாரமாயிருப்பது நானே. நான் பல கால்வாய்கள் மூலம் அம் மாவட்டம் முழுவதிலும் உலாவுகிறேன். என் கரையோரத்தில் பாபநாசம், திருநெல்வேலி, ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார் திருநகரி முதலிய சிறந்த ஊர்கள் இருக்கின்றன. என் நீரோட்ட வேகத்தைத் தடுக்க மக்கள் பன்னிரண்டு அணைகள் கட்டியிருக்கின்றனர்.

அம்பாசமுத்திரத்துக் கருகில் நான் மலை மீதிலிருந்து கீழே பாய்கிறேன். இங்கே எனக்குப் பாபநாசம் நீர் வீழ்ச்சி என்பது பெயர். இங்கு நான் பாயும் வேகத்திலிருந்து மக்கள் மின்சார சக்தி எடுககின்றனர்.

என்னோடு பல கிளையாறுகள் வந்து சேருகின்றன. அவற்றுள் சிறந்தது சிற்றாறு என்பது. அது தென்காசிக்கு மூன்றரை மைல் தொலைவில் உள்ள திரிகூட மலை என்னும் குற்றால மலையிலிருந்து கீழே பாய்கிறது. குற்றாலமலை இயற்கை அழகும், வளமும் மிகுந்த மலை. அம் மலை மீதிருந்து பல கால்களாகப் பிரிந்து சல சல என்னும் ஒலியுடன் விழும் சிற்றாறு குற்றால நீர் வீழ்ச்சி என்னும் பெயர் பெற்று, மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்கின்றது.

அந்நீர் வீழ்ச்சியைக் காணவும், அதில் குளித்து மகிழவும், அங்கேயே பல நாட்கள்வரை தங்கவும் நாள்தோறும் ஜனங்கள் அங்கு சென்றபடி இருக்கின்றனர்.

இவ்வண்ணம் நான் கல்லிலும் மலையிலும் குதித்துக் குதித்து, காடு, செடி கடந்து, ஏரி குளங்களை நிரப்பி, ஓடைகள், ஊற்றுக்களில் புகுந்து, வறண்டு கிடக்கும் வயல்களைப் பசுமை அடையச் செய்து, இறுதியில் திருநெல்வேலி மாவட்டத்தைக் கடந்து, மன்னார் வளைகுடாவில் (கடலில்) கலக்கின்றேன். மக்கள் உடற் பிணிகளைத் தீர்த்து, அவர்களை மனம் மகிழச்செய்விக்கின்றேன். என் கடனைத் தினமும் தவறாது செய்து வருகின்றேன்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே'

P. R. ஜமுனா, I-A.

மூர்க்கன் முகத்தில் மூதேவி குடியிருப்பாள்

சென்னையில் ஒரு வாரம்

என் இருப்பிடம் திரிச்சூர். பொங்கல் விடுமுறைக்கு என் ஊருக்கு வந்த என் அத்தையுடன் பள்ளிக்கு ஒருவார லீவ் போட்டு விட்டுச் சென்னைக்கு வந்தேன். ஸெண்டிரல் ஸ்டேஷன் வந்ததும் இறங்கினேன். எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு பெரிய கட்டிடம்; ஐந்து, ஆறு பிளாட்பாரம்! இரண்டு மூன்று ரயில்கள் ஒவ்வொன்றாக வெவ்வேறு திசையில் சென்றதைப் பார்த்தேன். ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் விஸ்தாரமான தார்ரோடுகளும், உயரமான கட்டிடங்களும், அநேக விதமான மோட்டார்களும், பஸ் ஆட்டோ ரிக்ஷா முதலியவைகளும் எனக்குப் புதுமையாகத் தோன்றின. மறு நாள் சுற்றிப்பார்க்கத் தொடங்கினேன். மூர்மார்க்கேட்டையும், மிருககாட்சிசாலையும் கண்டேன். அருகில் பூந்தோட்டத்திலிருந்த அநேக விதமான புஷ்பங்கள் என் கண்ணைப்பறித்தன. அங்கிருந்து பஸ்ஸில் ஏறிக்கொண்டு ஹைகோர்ட்டு, லைட்ஹவுஸ் முதலியவற்றை அடைந்தேன். லைட்ஹவுஸின் மேல் ஏறிப்பார்த்தேன். அங்கிருந்து சென்னைப்பட்டினம் முழுவதும் தெரிந்தது. வீடுகளும், கட்டிடங்களும் மிகச்சிறியனவாகத் தெரிந்தன. அச்சமயம் இரண்டு ஆகாய விமானங்கள் பறந்ததைக் கண்டேன். பிறகு அங்கிருந்து மீண்டும் பஸ்ஸில் ஏறி மெரினாபீச் வழியாக மயிலாப்பூர் சென்று கபாலீசுவரர் கோயிலை அடைந்தேன். அங்குள்ள கடவுளைத்தொழுது அக்கோயிலைச் சுற்றியுள்ள இடங்களையும் கண்டு மீண்டும் பஸ் ஏறி மீனம்பாக்கம் சென்றேன். அங்கு வெளியூர் செல்லத் தயாராக நின்று கொண்டிருந்த விமானத்தினுள் ஏறிச்சென்று, அதனுள் பிரயாணிகளுக்குள்ள அற்புதமான சௌகர்யங்களைக் கண்டு திரும்பினேன்.

அடுத்த நாள் மியூஸியம் சென்று அங்குள்ள பழங்கால மனிதர்களின் சின்னங்களைக் கண்டு மகிழ்ந்தேன். பிறகு துறைமுகம் சென்றேன். அங்கு சுமார் பத்துக் கப்பல்கள் வந்து இறங்கும்படியான வசதிகள் இருந்தன. நம் தேசத்திற்குத் தேவையான பொருள்கள் இறக்குமதியாவதையும் அங்குகாணலாம். பிரயாணிகள் செல்லும் கப்பலும் மிக அழகாய் இருந்தது.

சென்னையில் தங்கிய ஒருவாரத்தில் நான் கண்ட புதுமையெல்லாம் என் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டு என் ஊர் திரும்பியதும் என் சிநேகிதிகளுக்குச் சென்னையைப்பற்றி நான் கண்டவாறு எடுத்துச் சொன்னேன்.

S. R. கமலா, I-B.

மைசூர்

தசராவிற்காக நாங்கள் காரில் சித்தூர், பெங்களூர் வழியாக மைசூருக்குச் சென்றோம். பெங்களூரிலிருந்து மைசூருக்குச் செல்லும் பாதை மிகவும் நன்றாக இருந்தது. மலைப்பிரதேசமானதால் ரஸ்தாக்கள் மேடு பள்ளமாகவும், வளைந்து வளைந்தும் சென்றன. அத்தகைய ரஸ்தாக்களில் எங்கள் கார் ஏறியும் இறங்கியும் சென்றபோது நாங்கள் மிக்க குதூகலமடைந்தோம்.

மைசூர் ஓர் அழகான ஊர். அங்கு அரசர் வசிக்கும் லலித மஹால் அரண்மனை மிகவும் அழகானதோர் கட்டிடம். அது ஊருக்கு நடுவில் இருக்கிறது. தசரா சமயத்தில் அவ்வரண்மனை விசேஷ அலங்காரங்களுடன், இரவு நேரத்தில் தீபாலங்காரமும் செய்யப்பட்டு விளங்கும்.

தசரா மைசூரில் மிகவும் முக்கியமான பண்டிகை. அந்தப் பத்து நாட்களும் அவ்வூர் முழுவதும் தனி சோபையுடன் காட்சியளிக்கும். வாண வேடிக்கைகளும், மற்றும் பல கேளிக்கைகளும், அப்பொழுது அங்கு நடப்பதுண்டு. அச்சமயம் மைசூர் மகாராஜா யானைமீதேறிச் சேனைகள் புடைசூழ பவனி வருவார். அது ஓர் கண்கொள்ளாக் காட்சியாகும். அதைக் கண்டு களிக்க பல ஊர்களினின்றும் மக்கள் வருவர்.

மைசூருக்கு அருகில் சாமுண்டி மலை இருக்கிறது. அம்மலை மீது சாமுண்டீஸ்வரி கோயில் இருக்கிறது. அங்கும் அரசர் தங்குவதற்கு ஓர் அரண்மனை உள்ளது. மலைமீது செல்ல வளைந்து வளைந்து போகும் ஓர் மோட்டார் ரஸ்தாவும் இருக்கிறது.

மைசூருக்குப் பன்னிரண்டு மைல் தொலைவில் மிகவும் முக்கியமானதும் அவசியம் பார்க்கவேண்டியதுமான ஒரு இடம் உள்ளது. அது தான் கிருஷ்ணராஜசாகர அணை. அதற்குப் பிருந்தாவனம் என்றும் பெயர். அது இயற்கைக் காட்சிகளும் செயற்கைக் காட்சிகளும் நிறைந்ததோர் இடம். இரவில் வர்ண தீபங்களால் அலங்கரிக்கப் பெற்ற நீரூற்றுக்கள் கண்ணுக்கு அரிய விருந்தளிப்பன. அவ்வளவு அழகு நிறைந்த இடத்தை விட்டு வர எவருக்கும் மனம் வராது. மைசூருக்குச் செல்பவர்கள் பிருந்தாவனத்தைக் காணத் தவறமாட்டார்கள்.

R. வத்சலா, I-C.



K. Eswari, II-E.

ரேடியோ நிலையம்

இன்றைய உலகில் நமக்கு வேண்டிய சாதனங்களில் ஒன்று ரேடியோ. ரேடியோவினால் நமக்குப் பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன. வெளிநாட்டு, உள்நாட்டுச் செய்திகளை அறிகிறோம். பல பேருடைய பிரசங்கங்களைக் கேட்கிறோம். அனேகருடைய கானத்தைக்கேட்டு மகிழ்கிறோம். ஆங்காங்கு நடக்கும் விளையாட்டுப் பந்தயங்களின் வர்ணனையை நாம் நேரில் பார்ப்பதுபோல், கேட்கிறோம். ஹிந்தி பாடங்கள், இசைப் பயிற்சி முதலியவற்றைக் கேட்டு நாமும் கற்றுக் கொள்கிறோம். இவையெல்லாம் ஒலிபரப்புவதற்காக ரேடியோ நிலையங்கள் அங்கங்கே உள்ளன.

இந்தியாவில் ஜலந்தர், பாட்னா, கட்டக், ஷில்லாங், கொஹாத்தி, நாகபுரி, விஜயவாடா, அலஹாபாத், தார்வார், கோழிக்கோடு முதலிய இடங்களில் மத்திய அலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன் மதருஸ், திருச்சி, புரோடா, கல்கத்தா, திருவனந்தபுரம், மைசூர், பம்பாய், டெல்லி, ஹைதராபாத் முதலியவை பெரிய ஒலிபரப்பு நிலையங்கள். இவற்றுள் மிகப் பெரியது டெல்லியிலுள்ள ரேடியோ நிலையம். தற்போது மதராஸில் புதிய ரேடியோ நிலையம் ஸாந்தோமில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலையத்தின் ஒலிபரப்பி கிண்டியில் இருக்கிறது. தற்போது உள்ள நிலையத்தில் எட்டு ஸ்டுடியோக்களும், வாத்தியங்களையெல்லாம் வைக்க ஒரு அறையும் வரவேற்பு அறை ஒன்றும் உள்ளன.

நிலையத்தை ஒட்டினாற் போல ஓர் உணவு விடுதியும் உள்ளது. நிலையத்தில் அனேக இஞ்சினீயர்கள், டைரக்டர்கள், உதவி டைரக்டர்கள், மேற்பார்வையாளர்கள், பாடகர்கள், வாத்ய வித்வான்கள் முதலியோர் உள்ளனர். காலை மணி 6-55 முதல் இரவு 10-30 வரை நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுகின்றன. ஒரு நாளில் நான்கு தடவை ஒலி பரப்பு நடைபெறுகிறது. ஒவ்வொரு அறையும் வெளியில் ஏற்படும் சப்தம் கேட்காதபடி அமைந்துள்ளது. ஒரு அறையிலிருந்து கடைசி அறை வரை பார்க்கும்படியாக நடுவில் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இது விஞ்ஞானிகள் உலகத்திற்குத் தேடித்தந்த சிறந்த பரிசாகும். இன்னும் இவர்கள் உழைப்பினால் பல அதிசயங்களை நாம் பார்ப்போம். பல அனுகூலங்கள் நாம் பெறுவோம்.

D. கலைவாணி, I-D.

கப்பல்

நாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல உதவும் சாதனங்கள் பல. தரை மார்க்கமாகச் செல்ல ரயிலும், ஆகாயத்தில் செல்ல ஆகாய விமானமும், நீர்வழியாகச் செல்லக் கப்பலும் நமக்குப் பயன்படுகின்றன. கப்பலில் பாய் மரக்கப்பல், நீராவிக்கப்பல், நீர்மூழ்கிக்கப்பல், சண்டைக்கப்பல், வியாபாரக்கப்பல், பிரயாணக் கப்பல் எனப் பலவகையுண்டு.

வியாபாரக்கப்பல், வியாபாரத்திற்கு வேண்டிய சரக்குகளை ஏற்றிச் செல்லும். பிரயாணக்கப்பல் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் சண்டைக்கப்பல் சண்டை செய்வதற்கு வேண்டிய ஆயுதங்களையும், வீரர்களையும் ஏற்றிச்செல்லும். முற்காலத்தில் மனிதர்கள் பாய் மரக்கப்பலில் பிரயாணம் செய்தார்கள். இக்கப்பல்கள் காற்றின் உதவியின்றிச் செல்லாவாகையால், நினைத்தபோது பிரயாணம் செய்வது முடியாமலிருந்தது. மேலும் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர பல நாட்கள் ஆயின. ஆகவே நீர்மார்க்கமாக விரைவில் செல்லக்கூடிய ஒரு சாதனத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தனர். அதன் விளைவே நாம் தற்காலத்தில் பிரயாணம் செய்யும் நீராவிக் கப்பல்.

இதில் நகரத்திலுள்ள வசதிகளெல்லாம் அமைந்திருப்பதால் இதை மிதக்கும் நகரம் என்று சொல்லுவது பொருந்தும். முற்காலத்தைப்போல் இல்லாமல் தற்காலத்தில் கப்பலில் பயமில்லாமலும், சௌகரியமாகவும், சீக்கிரமாகவும் பிரயாணம் செய்யலாம்.

சௌகரியமாகப் பிரயாணம் செய்யத்தக்க இந்நீராவிக் கப்பல்கள் ஏற்பட்ட பிறகும் மக்கள் கட்டுமரங்களையும், பாய்மரக் கப்பல்களையும் விடாது உபயோகப்படுத்துகின்றனர். கடற்கரை ஓரங்களில் வசிக்கும் செம்படவர்கள் விடியற்காலையில் இவைகளில் மீன்பிடிக்கச் செல்வதும், மாலையில் கரைக்குத் திரும்புவதும் காண்பதற்கோர் அரிய காட்சியாகும்.

S. வத்சலா, I-E.



C. P. Nirmala, V-B.

வாழ்கிறதும் தாழ்கிறதும் வண்டி உருளை போல

ஆசிரியர் சங்கம்

பள்ளியின் பல்வேறு கிளைச்சங்கங்களுக்கு ஆணிவேர் போன்றது ஆசிரியர் சங்கம். இச்சங்கத்தார் திரை மறைவில் ஆற்றும் பணியே மாணவியர் எல்லாத் துறையிலும் சிறந்தோங்கச் செய்கிறது. அல்லும் பகலும் தலைவியவர்கள் வகுத்த வழியே பின்பற்றி, குழந்தைகளின் வெற்றியே எமது வெற்றியென மதித்து மாணவியர் முன்னேற்றத்திற்கான வழிகளை ஆராய்வதிலேயே ஈடுபட்டு மற்றும் ஓர் ஆண்டை இனிது கழித்தோம்.

அலுவல் கூட்டங்கள் : இவ்வருட முதல் அலுவல் கூட்டத்தை பிரஸிடென்ஸி கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் Mrs. G. பார்த்தசாரதி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். வழக்கம் போல ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமையன்று கூடி மாதிரி வகுப்புக்கள், போதனுமுறை பற்றிய விவாதங்கள் முதலியன நடத்தி, அவ்வச் சந்தர்ப்பங்களில் தலைவி கூறிய ஆலோசனைகளை மனத்திற்கொண்டு கையாண்டு பயனடைந்தோம். அதோடு ஒரு கூட்டத்தில் தலைவியவர்களே சமூக நூல் பாடம் ஒன்றைத் தகுந்த உபகரணங்கள் கொண்டு மாதிரி வகுப்பு நடத்தி அப்பாடம் போதிக்கப்பட வேண்டிய முறையை எல்லோருக்கும் உணர்த்தினுர்கள். பள்ளிக் காரியதரிசி, குருகுல தர்மாச்சாரிய ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்கார் அவர்கள் தேக அசௌக்யத்தையும் பொருட்படுத்தாது நான்கு முறை எமது கூட்டத்தில் கலந்துகொண்டு 'ஆசிரியரும் அவர்கள் கடமையும்', 'ஆங்கிலப் பாட போதனை' 'மாணவியரைத் தனித்தனி கவனித்தல்' 'கட்டுரைகளைத் திருத்தம் செய்யும் முறைகள்' என்ற தலைப்புக்களில் அநுபவத்தில் தாம் கண்டறிந்த பல விஷயங்களை எங்களுக்கு எடுத்துச் சொன்னது எங்களுக்கு மிகுந்த அநுகூலமாய் அமைந்தது.

நாடகம் : ஆசிரியர் சங்க நாடகம் இம்முறையும் சிறப்பாகவே நடைபெற்றது. கண்ணனிடம் பெருங்காதல் கொண்டு இவ்வுலக இன்பங்களை உதறித்தள்ளி, அவன் பாதாரவிந்தங்களைப் பற்றிக் கடைத்தேறிய 'மீரா'பாய்' சரித்திரத்தை நாடக மேடைமேல் கண்டு பக்தி பரவசத்தால் பேரானந்தம் அடைந்தனர் எம் குழந்தைகள். அவர்கள் இளம் உள்ளங்களில் பக்தி விதையை ஊன்றிவிட்டால் பிறகு அது தழைத்தோங்கி அவர்களை நல்ல நெறியிலே செலுத்தும் என்பது எங்கள் நம்பிக்கை. நாடகத்திற்குத் தலைமை தாங்கிய, நாடகத் துறையில் அநுபவம் நிரம்பிய Dr. ராமமூர்த்தி அவர்கள் 'ஆசிரியர் அனுபவம் பெற்ற தொழிலாளி நடிகர்களைப்போல அனுயாசமாக நடித்து எல்லோரையும் மதி மயங்கச் செய்து விட்டார்கள்' எனப் புகழ்ந்து பாராட்டினுர். நாட

கத்தில் வசூலான தொகை சங்க நிதியில் சேர்க்கப்பட்டது.

விசேஷ நிகழ்ச்சிகள் : இவ்வருடம் கலைத் தெய்வமான ஸரஸ்வதி தேவியின் பளிங்குக் கற்சிலை யொன்று பிரார்த்தனை மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. நாங்கள் ஏகமனதாகத் தீர்மானித்து எங்கள் நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் கொடுத்து தேவியின் விமானச் செலவில் பாதியை ஏற்றுக் கொண்டோம். வருடாந்திர விற்பனை விழாவிலும் நாங்கள் பங்கெடுத்துக் கொண்டோம். வகுப்பு வாரியாகக் குழந்தைகளுக்கு விற்பனைக்குத் தின்பண்டங்களைத் தயாரித்துக் கொடுத்ததோடு எங்கள் பேரால் ஒரு கடையில் 'சாக்லேட்' செய்து விற்று அதிற்கிடைத்த சொற்ப லாபத்தைத் தீனபந்து சங்கத்திற்கு அளித்தோம்.

விருந்துகள் : வருடா வருடம் மூன்று விருந்துகளை நாங்கள் ஆவலோடு எதிர் பார்ப்பதுண்டு. எதிர் பார்ப்பதில் தவறில்லை; ஏனெனில் நம்மேல் அன்புடையவர் நமக்கு உரிமையோடு அளிப்பதை எதிர் பார்த்திருப்பது நியாயம்தானே! அவற்றில் ஒன்று தீபாவளி விருந்து: பள்ளி நிர்வாகத் தலைவரும் அங்கத்தினரும் பேரன்புடன் அளித்த தீபாவளிப் பரிசுகளும் விருந்தும் பள்ளிச் சிப்பந்திகள் முதல் அனைவரையும் களிப்படையச் செய்தன. பள்ளி நிர்வாகத் தலைவர் Sri S. வரதாச்சாரியார் ஆசி கூறி வழங்கிய வஸ்திரங்களைப் பெற்று மிக்க ஆனந்தம் அடைந்தோம். எங்கள் உள்ளங்கள்தான் அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கக் கூடுமே தவிர வாய் வார்த்தைகள் இதற்குப் பயன்பட மாட்டா.

நமது காரியதரிசியவர்கள் விருந்து வழக்கத்தைவிட அதிநேர்த்தியாக அமைந்தது. நோய் வாய்ப்பட்டுத் தெய்வ அருளால் அதனின்றும் விடுதலையடைந்த எமது காரியதரிசி அவர்களை மீண்டும் திடகாத்திரராய்க் காணப்பெற்ற பேரானந்தத்தோடு விருந்தில் பங்கு கொண்டோம். தலைவியவர்களுக்கும் சிறிது தேக அசௌக்யம் ஏற்பட்ட போதிலும் தெய்வாதீனமாக அவர் வெகு விரைவில் பூரண நலம் பெற்று, திட்டமிட்டபடி குறிப்பிட்ட நாளில் எங்களுக்கோர் இனிய விருந்தளித்தார். இப்பெரியார்கள் எங்களிடம் காட்டும் அன்புக்கும் ஆதரவிற்கும் பிரதி செய்வது இயலாத காரியம். அவர்கள் வார்த்தைக்குக் கட்டுண்டு பணிந்து நடந்தே எங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்கக்கூடும்; எங்களுக்கு விருந்தளித்துக், கௌரவித்த பெரியார்களுக்கு எல்லா நன்மைகளையும் பரம்பொருளான பகவான் அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

எம் சங்கத்தார் செய்யும் சிறு காரியத்தையும் சிலாகித்துக்கூறி எம்மை ஊக்குவிக்கும் பெரியார்கள் ஆசி எமக்கிருக்க, இவ்வருடத்து அலுவல்களை நாங்கள் வெற்றிகரமாக முடித்தது வியப்பில்லை. அவர்கள் அன்பும் ஆசியும் என்றென்றும் எமக்குத் துணை நின்று எமது முயற்சிகளைப் பயனுடையதாக்க இறைவன் அருள் புரிவாராக.

C. R. சத்தியபாமா,
B.A., B.T., H.Sc. (Dip)
V. சரோஜினி,
வித்வான் (தமிழ்)
காரியதரிசிகள்.

வேளையும் நாழிகையும் வந்தால் வேண்டாம் என்றாலும் நிற்காது

பழைய மாணவியர் சங்கம்

ஒருவருடன் நீண்ட நாட்கள் பழகி திடீரெனப் பிரிய நேரும் பொழுது மிகுந்த துக்கம் ஏற்படு கிறது. அன்னோரை மீண்டும் ஒரு நாள் சந்திக்கும்பொழுது, நமது ஆனந்தம் எல்லை கடந்துவிடுகிறது. பிரிந்தவர் கூடும்பொழுது எத் துணை மகிழ்ச்சி, எத்துணை ஆர வாரங்கள்? அத்தகைய ஆரவாரங் களுக்கிடையே ஜனவரி மாதம் 22-ந்தேதி சனிக்கிழமை யன்று எம் பள்ளியில் பழைய மாணவியர் சங்கத்தின் 17-ஆம் ஆண்டு விழா வெகு விமரிசையாக நடந்தேறியது.

வெகு நாட்களாகக் காணாதிருந்த முகங்களையும், பழகின இடத்தை யும் மீண்டும் காணும்பொழுது யாருக்கும் இன்பம் ஏற்படுவது சகஜந்தானே? பள்ளி ஆசிரியை களும், ஆறாம் படிவ மாணவியர் களும், சந்தனம், குங்குமம், புஷ்பம் இவைகளை அளித்துப் பழைய மாணவிகளை வரவேற்றனர். அன்று சுமார் முந்நூறு பழைய மாணவியர்கள் விஜயம் செய்தனர்.

பல நாட்களாகக் காணாதிருந்த தம் சிநேகிதிகளை இச்சந்தர்ப் பத்தை யொட்டி காண நேர்ந்த பொழுது, நேரம் போவது தெரியா மலும், இடம்விட்டுப் பெயராமலும் அளவளாவிக்கொண்டே இருந்த னர். சுவை மிக்க சிற்றுண்டிகளை யாவரும் அருந்திய பின்னர் விளை யாட்டுப் பந்தயத்தில் 'பழைய மாணவியர்' என்னும் பெருமிதத் தோடு பங்கெடுத்துக்கொண்டார் கள். பழைய மாணவிகளுள் ஒருவ ரான ஸ்ரீமதி K. மங்களம், B.Sc., M.Ed., B.L. அன்று தலைமை வகிக் கும் பேறு பெற்றார். அவர் தமது உரையில் இப்பள்ளியின் மேன்மை யையும், குழந்தைகளுக்கு வேண்டிய சில நற்பண்புகளையும் எடுத்துக் கூறினார். பள்ளியின் சார்பில் பள்ளி நிர்வாகக் கமிட்டியின் தலை வரான ஸர். எஸ். வரதாச்சாரியார் K.T., B.A., B.L., அவர்கள் 'சீலமே சிறந்த அணிகலம்' என்னும் நமது பள்ளியின் குறிக்கோளைப்பற்றி யும், பெண்மணிகளுக்கு வேண்டிய சிறந்த பண்புகளையும் அழகாக எடுத்துரைத்தார். ஆசிரியர்களின் சார்பில் பேசிய ஸ்ரீ H. R. நாக மணி, B.A., B.T., அவர்கள், பள் ளியைவிட்டு வெளிச் சென்ற மாணவியர்கள் எவ்வெவ் விதங் களில் பள்ளிக்கு உதவி செய்து, தொடர்பு வைத்துக்கொள்ள முடி யும் என்பதைப்பற்றிக் கூறினார். பழைய மாணவியர் சார்பில் சௌ. K. P. லலிதா நன்றி கூறும் பொழுது இப்பள்ளியானது தங்க ளுக்கு எவ்வெவ் விதங்களில் நன்மை செய்துள்ளது என்பதைப் பற்றியும், இப்பொழுது படிக்கும் மாணவியர்கள் அடைகின்ற சௌகரியங்களைப் பற்றியும் விரித் துக் கூறினார். ஆறாம் படிவ மாண வியர்கள் சார்பில் பேசிய சௌ.

D. கௌசல்யா, பள்ளி தமக்குப் புரியும் நலங்களையும், பழைய மாணவிகள் பள்ளிக்குப் பெருமை தேடித் தரும் வகையில் வெளியே பொறுப்பான பதவிகளை ஏற்றுக் கொண்டு ஆற்றும் தொண்டுகளை யும் விளக்கிக் கூறினாள்.

பின்னர் நடந்த கதம்ப நிகழ்ச்சி யில் பழைய மாணவிகளும், ஆறும் படிவ மாணவியரும் பங்கெடுத்துக் கொண்டு தம் உயரிய நடிப்பால் யாவரையும் மகிழ்வித்தனர். வந் தனோபசாரத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

இச்சங்கம் பலவகைகளில் தங்க ளால் இயன்றவரை பள்ளிக்கு உதவி செய்து வருகிறது. உயர்தர வகுப்புகளில் படிக்கும் ஒரு மாண விக்கு உபகாரச் சம்பளம் அளிக் கும் பொறுப்பை இச்சங்கம் ஏற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக் கது. கலைமகள் பிரதிஷ்டைக்கென இச்சங்கத்தார் ரூ. 600 கொடுத்து உதவியுள்ளனர்.

இன்றுவரை இருபத்தேழு அங் கத்தினர்கள் இச்சங்கத்தின் ஜீவிய கால அங்கத்தினர்களாக உள்ள னர். இத்தொகை இன்னும் அதி கரிக்கும் என நம்புகிறோம். 'பிரி வதற்கே கூடுகிறோம்; கூடுவதற்கே பிரிகிறோம்' என்னும் வாக்கின் உண்மையை இச்சங்கம் நிரூபிக் கிறது. இதன் அங்கத்தினர்கள் மேன்மேலும் இச்சங்கத்திற்கு ஆத ரவு காட்டுவார்களேயாகில், பள்ளி யின் நான்கு தூண்களில் ஒன் றெனக் கூறப்படும் இதன் வாயி லாய் பள்ளி மேன்மையுறும் என்பது திண்ணம்.

T. கல்பகம், B.A., B.T.,
M. பிச்சை,
காரியதரிசிகள்.

அன்னையர் சங்கம் 1954-55

தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னை நகரத்தில் மக்களின் உள் ளத்தைப் பெரிதும் கவர்ந்து நிற் கின்றது மயிலை லேடி சிவஸ்வாமி அய்யர் பெண்கள் பாடசாலை. இப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பல சங்கங்களுள் அன்னையர் சங்கம் மிக உன்னத முறையில் நடந்து வருவதை யாவரும் அறிவர். இச் சங்கத்திற்கு 9 ஆண்டுகள் பூர்த்தியாகி 10-வது ஆண்டில் சுமார் 80 ஜீவிய கால அங்கத்தினர் களை தன்னுள் கொண்டுள்ளது. இதில் மிக்க ஆர்வம் காட்டும் காரி யக் கமிட்டி அங்கத்தினர்களுக்கும், பள்ளித் தலைவி ஸ்ரீமதி S. செல்லம், M.A., L.T., அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

நிகழ்ச்சிகள் :

சென்ற ஆண்டிலும் பள்ளியில் போதனை முறைகளைக் காண, சில அன்னையர்கள் வந்திருந்தனர்.

வழக்கம்போல் பள்ளி கண்காட்சியில் அன்னையர்களும் பங்கெடுத்துக் கொண்டது எங்களுக்குத் தனிச் சிறப்பாகும். கண்ணைக் கவரும் புத்தம் புதிய கைவேலைகள் அன்னையர் பகுதியில் வைக்கப்பட்டிருந்தன. அவைகளைச் சிறப்பாக அமைப்பதற்குதவிய ஸ்ரீமதி R. சீதா, ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி இவர்களே பலருடைய புகழுக்கு உரியவர்கள். அன்று விற்பனைச் சாலைக்குத் தின்பண்டங்கள் தயாரித்துக் கொடுத்து, அதன் மூலம் கிடைத்த தொகையைக், கண்காட்சிச் செலவிற்கு நன்கொடையாக அளித்த அன்னையர்களுக்கு சங்கத்தாரின் நன்றி.

ஆண்டுவிழா:

1954-ஆம் வருஷம் மார்ச் மாதம் 1-ஆம் தேதி இச்சங்க ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. அன்னாள் அன்னையர்களுக்கு ஓர் நன்னாளாகும். அன்று தலைமை வகிக்க இருந்த ஸ்ரீமதி விஜயலட்சுமி கோபாலரத்னம் அவர்கள் வர இயலாததால், ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி அவர்கள் அவ்விழாவிற்கு அக்ராசனம் வகித்து, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அழகாகப் பேசி, விழாவை மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்.

1955-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழாவிற்கு தலைமை வகித்தவர் Dr. L. A. Cornelius, Ph.D., D.I.C. (Lond.) Dip., Edn., Inspector of Girls' Schools, Madras. அவர் பள்ளியில் அன்னையர் கூட்டத்திற்கு வந்தது பள்ளிக்கே தனிப் பெருமையாகும். அன்று சங்கக் காரியதரிசி அக்ராசனரை வரவேற்று யாவருக்கும் அவரை அறிமுகப்படுத்தினார். அக்ராசனர் தமது தலைமை உரையில் பின்வருமாறு பேசினார்:—

"நான் இப் பள்ளியைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்கிறேன். உத்யோக முறையில் இங்கு வந்து பல அலுவல்களைக் காண சந்தர்ப்பம் கிடைத்தது. பள்ளி பரிசீலனைக்காக வந்த மூன்று நாட்களையும் இனிது கழித்தேன். இன்றைய நிகழ்ச்சிகளில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. சமூகம் குணசாலிகளான ஆண்களையும், பெண்களையுமே விரும்புகிறது. இந்தப் பள்ளி மதபோதனை மூலம் குழந்தைகளிடையே தெய்வ நம்பிக்கையை வளர்த்து வருகிறது. பள்ளிக்குக் காலம் தவறாமலும் ஒழுங்காகவும் மாணவியர் வர பெற்றோர், முக்கியமாக அன்னையர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

ஓய்வு நேர வேலைகள் இங்கு கற்பிக்கப்படுவதைக் காண நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வகுப்புகளுக்கும் குழந்தைகளை அனுப்பத் தாய்மார்கள் அனுமதிக்க வேண்டும். மற்றும் இங்கு கண்காட்சியில் மாணவிகள் தங்கள் திறமையைப் பலவழிகளில் நன்கு விளக்கியிருக்கின்றனர். இன்

றைய தினத்தை உங்களுடன் வந்து இன்பமாகக் கழிக்க எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவிக்கு என் நன்றி."

அச்சமயம் ஸ்ரீமதி P. N. செல்லம்மாள், ஸ்ரீமதி பூமா பார்த்தசாரதி ஆகிய இருவரும் பள்ளியில் மதபோதனை' பள்ளியில் ஒழுங்கு முறைப் பயிற்சிகள் என்றதலைப்புகளின் கீழ் விஷயங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறினர். ஸ்ரீமதி கமலா ராஜகோபாலன், B.A.L.T, ஸ்ரீமதி V. சரோஜினி, Vidwan (Tamil) ஆகிய ஆசிரியர்களும் முறையே 'பள்ளி வாழ்க்கையின் சாரம்', 'பிற்கால வாழ்க்கைக்கு அடிப்படையான ஓய்வுநேர வேலைகள்' என்பவைகளைப்பற்றித் தெளிவாகப் பேசினர்.

அன்னையர்கள் சார்பில் ஸ்ரீமதி விஜயலட்சுமி கோபாலரத்னமும், பள்ளி நிர்வாகஸ்தர்கள் சார்பில் ஸ்ரீமதி P. N. ராமஸ்வாமியும் பள்ளியின் பல அம்சங்களைப் பற்றி புகழ்ந்து கூறினர்.

அன்னையர்களுக்கு அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் போட்டியில் 20 அன்னையர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற ஸ்ரீமதி S. லலிதா, ஸ்ரீமதி D. சூர்ய குமாரி இவர்கள் இருவருக்கும் பரிசுகள் வழங்கபட்டன.

ஸ்ரீமதி K. R. லட்சுமி கோட்டு வாத்தியம் வாசிக்க ஸ்ரீமதி V. R. சந்திராவும், ஸ்ரீமதி V. C. சரோஜாவும் இன்னிசை விருந்தளித்து விழாவைச் சிறப்பித்தனர். அம்மூவருக்கும் எங்கள் நன்றி.

இதன் பின் பள்ளி மாணவிகள் 'சபாபதி' நாடகத்தில் ஒரு ஹாஸ்யப் பகுதியை திறமையாக நடித்துக் காட்டி யாவரையும் மகிழ்வித்தனர். பள்ளி மங்களகீதத்துடன் விழா இனிது முடிவடைந்தது.

அன்னையர் உதவி :

இச் சங்க அங்கத்தினர்களில் சிலர், பள்ளியில் நவராத்ரியின் போது சுமார் 300 அன்னையர்களுக்குத் தாம்பூலம் வழங்கும் பெரும் பணியை மேற்கொண்டு நடத்தி வருகின்றனர். மற்றும் இவ்வாண்டு பள்ளியில் கலைவாணியின் பிரதிஷ்டை கைங்கர்யத்தில் தாங்களும் ஈடுபட ஆவல் கொண்டனர். அதற்காகத் தங்கள் நிதியிலிருந்து ரூ 400 நன்கொடையாக அளித்ததற்கு எம்மாறாத நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்னும் பள்ளி ஸ்ரீராம நவமி பூஜையும் அன்னையர்களாலேயே நடத்தப்பட்டு வருவதை யாவரும் அறிவர்.

முடிவுரை :

பல சந்தர்ப்பங்களிலும் எங்களுடன் ஒத்துழைத்து சங்கத்தின் வளர்ச்சிக்குப் பாடு படும் அன்னையர்களுக்கு என் வந்தனம். மற்றும் தளரா ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைத்துவரும் எம் தலைவியின் ஆதரவில் இச் சங்கம் பல்லாண்டு வாழ இறைவன் அருள் புரிவாராக.

V. **ராஜம்மாள்,**
காரியதரிசி.

மாணவியர் சங்கம்

வானோக்கி கம்பீரமாய் நிற்கின்றது எம் பள்ளி. அதைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன ஆசிரியர் சங்கம், தாய்மார் சங்கம், பழைய மாணவியர் சங்கம், மாணவியர் சங்கம் ஆகிய நான்கு தூண்கள்; இவற்றுள் முக்கியமானது மாணவியர் சங்கமே. தேசத்தின் செல்வம் மக்கள் என்பது போல் பள்ளியின் செல்வம் அதில் பயிலும் மாணவியர்களே ஆவர்.

இவ்வாண்டு கோடை விடுமுறைக்குப் பின் ஜூன் மாதம் 14-ஆம் தேதி பள்ளி திறந்தது. அவ் வருடத்திய பள்ளி அலுவல்கள் யாவும் தடையேதுமின்றி வெற்றிகரமாக முடியவேண்டுமென்று எம்பெருமானைத் துதித்த வண்ணம் எமது அலுவல்களைச் செய்யத் தொடங்கினோம். மிகவும் உற்சாகத்துடன் அம்மாத 17-ஆம் தேதியே பள்ளியிலுள்ள சங்கங்களின் காரியதரிசிகளைத் தேர்ந்தெடுத்தோம். ‘கருமமே கண்ணாய்’ இருக்கும். இச் சேவா, சுகாதாரச் சங்கங்கள் மறுநாளே தத்தமது கடமைகளை ஆற்றத் தொடங்கின. ஜூன் மாதம் 21-ஆம் தேதி எம் சங்க ஆரம்ப விழா கலையுள்ளம் படைத்த ஸ்ரீமதி குஹப்ரியை அவர்களின் தலைமையில் இனிது நடந்தேறியது. ‘தூய ஒழுக்கமெனும் சிகரத்தை அடைய வைக்கும் நான்கு படிகள் போன்ற அன்பு, அறிவு, சேவை, சரணம்’ என்னும் .எமது பள்ளியின் குறிக்கோள்களைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினார் ஸ்ரீமதி குஹப்ரியை. அது எங்களுக்கு உற்சாகமூட்டுவதாய் அமைந்தது.

“மனிதனின் கடமை மாநில மக்களுக்குத் தொண்டு புரிவதே” என்று அறைகூவி அலைந்தனர் மனித மாணிக்கங்கள். அத்தகைய தொண்டைச் செய்யவேண்டுமெனும் ஆர்வத்தை எமது உள்ளங்களில் தூண்டிவிட எம் பள்ளி முயல்கிறது. எம் பள்ளி சேவா, சுகாதாரச் சங்கங்களிலுள்ள மாணவியர்கள், பள்ளியில் அமைதியை நிலைநாட்டியும், ஆசிரியைகளுக்கு அவர்களால் இயன்ற உதவிகளைப் புரிந்தும், பள்ளியில் கொண்டாடப்படும் விசேஷ பூஜை தினங்களில் தேவையான உதவிகளைச் செய்தும் தொண்டாற்றும் கலையைக் கற்கின்றனர். இவ்வாண்டு, பள்ளியில், சலவைக் கல்லால் ஆக்கப்பட்ட கலைமகளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதையொட்டி மூன்று தினங்கள் நடந்த பூஜைகளிலும் பல மாணவியர்கள் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டு, கண் குளிர அம்பிகையை தரிசித்தனர்.

கலைகளில் எங்களுக்குள்ள உற்சாகத்தையும், ஆர்வத்தையும் வளர்த்து அவற்றில் எம்மைச் சிறப்படையச் செய்யப் பல நுண்கலைக் கழகங்கள் எம் பள்ளியில் உள்

ளன. தையல், பாட்டு, சித்திரம் போன்ற கலைகளுள் எங்களுக்கு விருப்பமானவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றில் போதிய தேர்ச்சி அடைந்துள்ளோம். நாடகங்கள் நடித்துக் காண்பிப்பதிலும் எங்களுக்குத் திறன் உண்டு என்பதை "தரும சக்கரம்" என்னும் நாடகத்தின் மூலம் காண்பித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்ருேம். சொல் வன்மை, சொற்பொழிவு, கட்டுரை, இயல், கையெழுத்து, தையல், சித்திரம், பாட்டு முதலியவற்றில் எம் பள்ளியில் நடத்தப் பெற்றப் போட்டிகளில் பலர் கலந்துகொண்டோம். 'சாரதா லேடீஸ் யூனியனி'ல் நடைபெற்ற தேவாரப் போட்டிக்குப் பலர் சென்று பரிசுகள் பெற்ருேம்.

தெய்வ பக்தியை எங்கள் உள்ளங்களில் வளர்க்கும் பொருட்டு சத் சங்கத்தின் ஆதரவில் பல பக்தி ரசச் சொற்பொழிவுகள் எம் பள்ளியில் நடத்தப் பெற்றுள்ளன. இவ்வாண்டு ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், ஸ்ரீ கி. வா. ஜகன்னுதன், ஸ்ரீ சிவகுமார், ஸ்ரீ நாட் அண்ணுஜி ராவ், ஸ்ரீ அமிருதானந்த யோகி, ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் ஆகியோர் ராமாயணம், கீதை முதலியவற்றிலிருந்து சில பகுதிகளை உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறி நீதி யறிவைப் புகட்டினர். இப்பெரும் பேற்றை எமக்களித்த எம் பள்ளியை யாம் என்றும் மறவோம்!

"சுவரை வைத்துக்கொண்டு தான் சித்திரம் எழுத வேண்டும்" என்னும் முதுமொழிக் கேற்ப உடலை ஆரோக்யமாக வைத்துக் கொண்டுதான் பிற செயல்களில் ஈடுபட வேண்டும். பள்ளிச் சிறுமிகள் தேக வலிமையுடன் திகழ வாரமிரு முறை தேகப் பயிற்சி வகுப்புகளும், உயர்தரப் பள்ளிகளுக்கு மாலையில் விசேஷப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவ் வாண்டு இறுதியில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் பலர் கலந்துகொண்டனர். ஆசிரியைகளும் பழைய மாணவியரும் எம்முடன் விளையாடிய விளையாட்டுக்களில் யாங்களே வெற்றி பெற்ருேம்.

எங்கள் எல்லோருக்கும் குடிமைப் பயிற்சியும் உயர்தர வகுப்புக்களுக்கு முதலுதவியும் கற்றுத் தரப்பட்டன. எங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் எங்குறைகளை எடுத்துச் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தது பள்ளி.

குடியரசு தினம், சுதந்திர தினம் ஆகிய முக்கிய தினங்களில் நாட்டுக்கே தம்மை அர்ப்பணித்த பெரியார்களின் வரலாறுகளை அவ்வச் சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறும் பேறு பெற்ருேம். இவ்விதம் எங்கள் முன்னேற்றத்திற்கே பாடுபடும் பள்ளி ஆசிரியர்களுக்கும் தலைமை யாசிரியைக்கும் நாங்கள் பிரதி செய்வது என்பது இயலாத காரியம். ஆனல் எங்களால் செய்

யத் தகுந்தது ஒன்று உண்டு. அது ஆசிரியர்கள் கற்பித்த வழி நின்று ஒழுக்க நெறியைக் கைப்பற்றி, பள்ளியின் புகழுக்காகப் பாடுபடுவதேயாகும். அதை நாங்கள் மனமுவந்து அனுசரிக்கப் போதிய சக்தியைக் கலைத் தேவி அருள் புரிவாளாக!

D. கௌசல்யா, VI-A.,
C. R. சந்திரா, V-A.,
மாணவியர் சங்கக் காரியதரிசிகள்.

பள்ளி ஆண்டு விழா : 1953-'54

மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களுள் பள்ளி ஆண்டு விழா மிக முக்யமானது. பள்ளி நிர்வாகஸ்தர்கள், அன்பர்கள், பெற்றோர்கள் நிறைந்த சபையில் கடந்த ஆண்டுத் தேர்வுகளிலும் போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவிகள் பரிசு வழங்கப் பெறும் குதூகல நன்னாள். அந்த விமரிசையான கொண்டாட்ட நாள் இவ் ஆண்டு 13-7-'54 அன்று கல்வி, நிதி மந்திரி ஸ்ரீ C. சுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் வெற்றிகரமாக நடந்தேறியது.

விழா ஆரம்ப நேரத்திற்குச் சற்று முன்னதாகவே, பெற்றோர்கள், மாணவியர், பழைய மாணவியர், அன்னையர் சங்கத்தினர், மற்றும் பள்ளி அன்பர்கள் ஆகியோர் மண்டபத்தில் நிரம்பினர். குறித்த நேரத்தில் விழாத் தலைவர் ஸ்ரீ C. சுப்ரமண்யம் அவர்கள் மங்கள கோஷத்துடன் பள்ளி நிர்வாகஸ்தர்கள், தலைவி, உபதலைவியாகியோர் வரவேற்க, மேடைமீது வந்து அமர்ந்தார். விழா ஆரம்பமாயிற்று.

பிரார்த்தனைக்குப்பின் பள்ளி நிர்வாகத் தலைவர் Sir S. வரதாச்சாரியார் அவர்கள் விழாத்தலைவரையும் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களையும் வரவேற்று, பள்ளியின் லட்சியத்தைப் பற்றி எடுத்துக்கூறி, விழாத் தலைவரை, தலைமை தாங்கி மேல் அலுவல்களை நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

தலைவியவர்கள், பல வேறு துறைகளில் ஆசிரியர்களும் மாணவியரும் ஒத்துழைத்துச் சாதிக்கும் பல அலுவல்களைப்பற்றியும், ஆண்டுதோறும் S.S.L.C வகுப்பில் தேர்ச்சி பெறும் மாணவியரின் சத விகிதம் மெச்சத் தகுந்த நிலையில் இருந்து வருவது பற்றியும், முக்கியமாகப் பள்ளியின் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றும் ஆசிரியர்களுக்குத் தமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தமது அறிக்கையில் குறிப்பிட்டார். அதன் பின் நிர்வாகஸ்தர் சார்பாக குருகுல

தர்மாச்சார்ய ஸ்ரீ K. ரங்கசுவாமி ஐயங்கார் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் பள்ளியின் அமோகமான வெற்றிக்குத் தலைமையாசிரியையின் ஊக்கமும் இடைவிடா உழைப்புமே காரணம் எனவும் அதற்குத் தம் நன்றியைத் தெரிவிப்பதாகவும் கூறினர்.

கதம்ப நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, மாணவியர் அறிவு வளர்ச்சிக்காக அவரவர் தகுதிக் கேற்பத் தேர்ந்து வைத்திருந்த அரிய நூல்களை அவைத்தலைவர் மாணவியருக்குப் பரிசாக வழங்கி ஆசி கூறினர்.

அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது: 'பள்ளியைத் திறம்பட நிர்வகித்து வரும் பெரியார் ஸர் எஸ். வரதாச்சாரியார் பள்ளியின் லட்சியத்தைப்பற்றி எடுத்துச் சொன்னர். இல்லற வாழ்க்கை மேம்பட்டு விளங்குவதற்கான தெய்வநம்பிக்கை, விருந்தோம்புதல் முதலிய நற்பண்புகள் வாய்க்கப் பெற்று மாணவியர் விளங்குவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இப்பள்ளியைப் பாராட்டுகிறேன். பெண் குழந்தைகள் கடமையுணர்ச்சியை உணர, பள்ளியில் மட்டும் சூழ்நிலையும் பயிற்சியும் இருந்தால் போதாது. வீட்டிலும் இப்பயிற்சியும் சூழ்நிலையும் ஏற்படும்படி பெற்றோர்களாகிய நாமும் ஒத்துழைக்க வேண்டும். இப்பள்ளிக்குப் பெற்றோர்களின் ஆதரவு பூரணமாக இருப்பது ஓர் தனிச்சிறப்பு.

தலைவியவர்களின் அறிக்கையைக் கேட்ட பிறகு நானும் ஓர் பெண்ணாகப் பிறந்து இப்பள்ளியில் வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்படாதா என்று 'யோசித்தேன். காரணம், வானளாவி நிற்கும் அழகான கட்டிடத்தின் கவர்ச்சியல்ல; திறமைசாலியான தியாகமே உருக்கொண்ட தன்னலமற்ற தலைமையாசிரியை, சலியாத உழைப்பாளியான காரியதரிசி இவர்களைப்பள்ளி பெற்றிருப்பதுதான். இது இப்பள்ளியின் தனி அதிர்ஷ்டம். எல்லாம் பொருத்தமான ஸ்தாபனம் இது. இவ்வகைப் பொருத்தத்தைத்தான் கடவுள் அருள் என்பது. இப்பேர்ப்பட்ட பள்ளியில் கல்வி பயிலும் பாக்கியத்தைப் பெற்றிருக்கும் உங்கள் இன் முகங்களைக் கண்டு களிக்கும் பேறு பெற்றேன். இந்தக் களிப்பு இன்னும் பல நாட்களுக்கு உற்சாகம் அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பரிசு பெற்றவர்களுக்கு என் பாராட்டு. எல்லோரும் வாழ்க்கையிலும் பரிசு பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.'

உபதலைவி Sri கமலா இராஜகோபாலன் அவர்கள் வந்தனோபசாரம் கூற விழா மங்களத்துடன் இனிது நடந்தேறியது.

V. சரோஜினி,
வித்வான் (தமிழ்)

LADY SIVASWAMI AYYAR GIRLS' HIGH SCHOOL, MYLAPORE

School Annual Sports : 19-2-1955.



Teachers' Circle Relay Competition.

Physical Demonstrations : Gipsy Dance.

Mothers and Old Girls about to start : Lime and Spoon Race.

Teachers' Union : Drama : Meera Bai : 27-3-1954.

Girls' Union : Drama : Dharma Chakram : 28-8-1954.

Entertainment at the School Anniversary Celebrations : 14-8-1954.
Minister C. Subramaniam, President, with a group of Girl-dancers.

நுண்கலை விழா

கடந்த பன்னிரண்டாண்டுகளாக எம் பள்ளியில் நடைபெறும் நுண் கலை விழா, இதிகாசங்களை ஒட்டிய பண்டைக் கதைகளாய் இருந்தன. ஆயின், இவ்வாண்டு இவ்விழா சரித் திரத் தொடர்பான சார்முடைத் தாய்த் தோற்றியது. இஃது புது மையின் பொலிவோடு மிளிர்ந்தது.

இவ்விழா செப்டம்பர் திங்கள் இருபத்தெட்டாம் நாள் சனிக் கிழமை மாலை ஆறரை மணிக்கு சுந்தரேஸ்வரர் மண்டபத்தில் தனிப்பட்ட சிறப்பான முறையில், அதாவது Cyclorama Effect என்று நாடக அரங்கில் கூறப்படும் முறை யில் அமைக்கப்பட்டிருந்தது.

ஒரு நாடகம் நடிப்பதென்றால் அதற்குப் பலர் உதவிகள் இன்றி யமையாதது. மாணவியரின் நடிப் புத் திறமைக்கேற்ப நாடகமும் அமைக்கப்படல் வேண்டும். நாட கக்கலையில் பயிற்சி உடையவர்கள் ஒரு சிலரே. அக்கலையில் தேர்ந்த வரான ரேடியோ அண்ணாவாகிய ஸ்ரீமான் குகன் அவர்கள் 'தர்ம சக்கரம்' என்ற அதி உன்னத மான சரித்திரக் கதையினை நாடக உருவில் அமைத்து, அத்துறையில் தமக்கிருந்த மேம்பாட்டால் தம் அலுவற்கிடையே நம் பள்ளிக்குப் பலமுறை வந்திருந்து, அதனைத் தக்கபடி மாணவிகளுக்குப் பயிற்றி, பெரிதும் உதவினர். அன்னார்க்கு இச்சங்கத்தின் சார்பாக எமது வந்தனம்.

வெள்ளித் திரையில் காணும் காட்சிகளை நாடகவரங்கிற்கேற்ப உருவாக்கி, கண்டோர் கருத்தைக் கவரத்தக்க முறையில் காட்சி களை அமைத்தவர் கலாசாகரம் இராஜகோபால் அவர்கள். ஜோட னைக் காட்சிகளை தேவலோகமோ எனச் சந்தேகிக்கும்படி அலங் கரித்த ஸ்ரீமான் கிருஷ்ணன் அவர் களுக்கும், Crompton கம்பெனியா ருக்கும் எங்கள் நன்றியறிதலான வணக்கம் உரித்தாகுக.

ஸ்ரீமான் குகன் அவர்களின் நண்பர்கள் நாடகத்திற்கேற்ற பின் னணி இசையினை வெகு நேர்த்தி யாக ஒலிக்கச்செய்து சிறப்பித்த னர். அடுத்த படியாக முக்கிய மாய்க் கூறவேண்டியது நடிகர் களின் நடிப்புத்திறன். அசோக னை நடித்த மாணவியும், மற்றும் தத்தம் வேடப் பொருத்தங்களோடு வெகு திறமையாய் நடித்த மாணவி களும், மாணவிகளா இவர்கள் அல் லது பண்டைச் சரித்திரப் பிரசித்தி பெற்ற அசோகனின் ஆட்சிக் காலத்தவரோ எனப் பார்த்தோர் அதிசயிக்கும்படி அழகாய் விளங்கி னார்கள்.

அசோகனது வீரமும், இரக்க மும், போர்க்களத்தில் கண்டகாட்சி யினால் ஏற்பட்ட மனமாற்றமும் நம்மை கி. மு. இரண்டாம் நூற் றாண்டிற்கு இழுத்துச் சென்றன. இரணகளத்தில் பிணங்களைக்

பொய் மெய்யை வெல்லுமா?

கொத்தும் கழுகுகளின் ஓசைக்கும், கணவனை இழந்து கதறும் காரிகையின் உணர்ச்சிக்கும் வசமாயினர் ரசிகர்கள்.

இவ்வாறாக நடிகர்களைப் பொருத்தமாகப் பொறுக்கி எடுத்ததோடல்லாமல், ஜோடனைகளையும் சிரத்தையோடு ஒளி, ஒலி முதலியனவும் நேர்த்தியாய் அமைக்கவே நாடகத்தை யாவரும் கண்குளிரக் கண்டு களிப்பெய்த முடிந்தது. திரை ஜோடனை வெகு வனப்பாய் இருந்தது. அரண்மனை, பாசறை, போர்க்களம் முதலியன மிக, மிகப் போற்றற்குரியன. மன அமைதியை அளித்த இன்னிசையினில் இருதயத்தை இழந்தோர் தம்மையே மறந்து இலயித்திருந்தனர்.

நாடகம் நேர்த்தியாய் அமைந்ததோடு நல்ல வசூலும் ஆயிற்று என்பதைக் கூறல் அவசியமன்றோ? ஆசிரியர்களும், மாணவிகளும் தம்மாலியன்ற வரை அதற்குப் பெரிதும் தொண்டாற்றி, உழைப்பின் பயனாக பெருந் தொகையைச் சேர்த்தனர். இத்தகைய பெரும் வெற்றிச் சிறப்பினைக்கொண்டாட செப்டம்பர் திங்கள் 4-ம் நாள் பள்ளிப் பிரார்த்தனைமண்டபத்தில் நாடகத்திற்குப் பங்குகொண்டோர்க்கு, நிர்வாகக் குழுவினரால் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

இந்நாடக விழாவிற்குத் தலைமை தாங்கிய ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணமூர்த்தி, M.A., Principal, Pachaiyappa's College, Madras, அவர்கள் தம் பேருரையில் சொற்களால் இயம்பவொண்ணாத சோபையுடன் விளங்கிய இந்நாடகத்தைப் புகழ்ந்து கூறினார்.

இத்துணை சிறப்பாக ஆண்டுதோறும் பள்ளி நாடகக் கழகத்திற்கு ஊக்கமளித்துப் புகழைப் பெருக்கும் பள்ளித் தலைவியாகிய ஸ்ரீமதி எஸ். செல்லம், M.A.,L.T. அவர்களது நன் முயற்சியாலும், மற்ற ஆசிரியைகளின் பேருக்கத்தினாலும், மாணவிகளின் ஒத்துழைப்பாலும் இக்கழகம் மிக உன்னத நிலை அடைவதோடு பல்கலையிலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்,

கமலா ராஜகோபாலன், B.A., L.T.
V. ராஜம்மாள்,

காரியதரிசிகள்.

A. Lakshmi, IV-B.

எழுதிய விதி அழுதால் தீருமா?

கலைக்கோயில்

உலகத்தில் உயிர்க்குயிராய் நின்று எங்கும் பரவி நிற்கும் சக்தியையே பிரம்மம் என்று கூறுவர். அன்பு, அறிவு, ஆனந்தம் என்ற மூன்றும் பிரம்மத்தின் இயல்புகள். அவற்றில் அறிவிற்காதாரமான சக்தியே சரசுவதி. அவள் ஒலி வடிவாய் உலகத்தில் நிறைந்திருக்கிருள். 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்பது தேவார மொழி. நாதஸ்வரூபியாயும், வாக்தேவியாயும் விளங்குகின்ற சரசுவதி தேவி பிரம்மாவினுடைய நாவிலே உறைபவள். அறிவின் திரளாக விளங்கும் அவள் அறிஞர்களிடையேயும், சிறுபாலர்களிடையேயும் உவகையுடன் களிநடம் புரிகின்ருள்.

'ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை' என்று பாவாணர்களால் துதிக்கப்படும் கலைவாணியின் வாசஸ்தலம் பள்ளியே. இத்தகையதோர் கலைக்கூடத்தில் கலைத் தேவியின் திருவுருவம் ஒன்றும் அமைக்கப்பட்டுவிட்டால் அங்குக் கலை பயிலுவோர் கலை உணர்ச்சியுடன் தூய உள்ளத்தையும் பெறுவர் என்பதற்கு அணுவளவேனும் ஐயமுண்டோ? இவ்வரிய பாக்கியத்தை நம் பள்ளி இவ்வாண்டு பெற்றது.

தேவியின் திருவுருவத்தைச் சமைத்தவர் கைதேர்ந்த சிற்பியான ஸ்ரீ K. ராஜகோபால் அவர்கள். சிற்ப சாஸ்திரத்தின் நுணுக்கங்களை நன்கு அறிந்தவரான அவர், வேத சாஸ்திரங்களில் வருணித்துள்ளபடி தேவியின் அங்க லட்சணங்கள் ஐயந்திரிபற அமையுமாறு தம் கைவன்மையைக் காட்டியிருக்கிருர்.

'வெள்ளைக்கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு' என்று புலவர் பெருமானல் வர்ணிக்கப்பட்டுள்ளபடி தேவியின் திருவுருவம் தூய வெண்மைச் சலவைக்கல்லில் கடைந்தெடுக்கப்பட்டுள்ளது. நான்கு திருக்கரங்களையுடைய தேவி யாழ், அக்ஷமாலிகை, புஸ்தகம், கமலம் முதலியவற்றை ஏந்திக்கொண்டவளாய், ஒரு பாதத்தை வெள்ளைக் கமலத்தின் மீது ஊன்றிக்கொண்டு, ஹம்ஸத்தை அருகில் உடையவளாய், யாழை மீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் நிலை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கிறது.

சரசுவதிக்குச் சிரம் உபநிஷதமும், நான்கு கைகள் நான்கு வேதமும், முகம் பிரமவித்தையும், கண்கள் எண்ணும் எழுத்தும், தனங்கள் சங்கீதமும் சாகித்தியமும், வயிறு ஸ்மிருதியும், பாதங்கள் புராண இதிகாசங்களும், யாழ் ஓங்காரமுமாகத் தத்துவப் பொருள் கூறப்படும்.

தேவியின் திருவுருவத்தை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகள் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே நடைபெற்றன. பள்ளியின் நடுநாயகமாகத் திகழும் பிரார்த்தனை மண்ட

பத்தின் மேடைமீது, சிறந்த வேலைப்பாடுகளுடன் கண்ணைக் கவரத்தக்க முறையில் அழகியதோர் விமானம் நிறுவப்பட்டது. தேவியின் பிரதிஷ்டைக்கென குறிப்பிட்ட நாளாகிய சரஸ்வதி பூஜை தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே வேதாகம முறைப்படி வைதிகச் சடங்குகள் குறைவற நிறைவேறின. வேதகோஷம் வானையளாவ, கும்பஸ்தாபனமும் பூஜையும் நடந்தன. இப்புனித வைபவத்தையொட்டி இந்தியாவின் பல்வேறு ஸ்தலங்களினின்றும் புனித தீர்த்தங்களும், விபூதி குங்குமப் பிரசாதங்களும் வரவழைக்கப் பட்டன. காலையிலும், மாலையிலும் பூஜையும் வேத பாராயணமும் நடைபெற்றன. சிறுமியரும் வந்திருந்து பூமாலைகளாலும், பாமாலைகளாலும் தேவியை வழிபட்டு இன்புற்றனர். சரசுவதி பூஜையன்று காலை கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பள்ளி நிர்வாகஸ்தர்களும், அன்பர்களும், மாணவியர்களும் தேவியின் திருவருளைப் பெற திரளாகக்கூடியிருந்தனர். குறிக்கப்பட்ட நேரத்தில் நான் மறையாளரின் மறை ஒலி முழங்க, மங்கள வாத்தியங்களின் கோஷங்களுக்கிடையே கும்பாபிஷேகம் நடந்தேறியது.

மாலையில் யாவரும் பள்ளிக்கு வந்து தேவியை வழிபட்டனர். அன்று தலைமை வகித்த பள்ளித் தலைவர் ஸர். எஸ். வரதாச்சாரியார் அவர்கள் தேவியின் பெருமையை எடுத்துரைத்தார். அன்று வாணியின் திருவுருவத்தையும், அவள் வீற்றிருக்கப் பொலிவுடன் விளங்கும் விமானத்தையும், அமைத்துத் தந்த ஸ்ரீ K. ராஜகோபால் அவர்களும் ஸ்ரீ கறுப்பையா ஆசாரி அவர்களும் தக்க முறையில் கௌரவிக்கப்பட்டனர்.

அன்று விசேஷ பூஜையுடன், மாணவியர்களுக்கு ரவிக்கைத் துண்டுகள் வழங்கப்பட்டன. மறுநாள் விஜயதசமி யன்று ஸ்ரீ K. பாலசுப்பிரமண்யம் அய்யர் அவர்கள் தேவியின் மகிமையைப் பற்றி எடுத்துரைத்தார். அவ்வமயம் ராஜாஜி உட்பட பல அன்பர்கள் வந்திருந்தனர்.

நேற்றுவரையில் கலைக்கூடமாக மட்டுமிருந்த நம் பள்ளி இனி கலைமகள் உறையும் கோயிலாகவும் விளங்குவது அவள் அருளே.

தினந்தோறும் திவ்விய வஸ்திராபரண பூஷிதையாக வீற்றிருக்கும் அவளது திருவுருவைக்காண எங்கள் கண்கள் என்ன புண்ணியம் செய்தனவோ. வெள்ளிக்கிழமை தோறும் விசேஷ அர்ச்சனையுடன் நடக்கும் பூஜையின்போது அவளது புன்னகை பூத்த மலர்வதனம் மேலும் சோபையுடன் விளங்குகிறது. இப்பள்ளித் தலைவியும், ஆசிரியைகளும், மாணவிகளும் அன்றாடம் நடத்தும் அலுவல்களைக் கவனித்து, அவர்களை மேன்மேலும் ஊக்கும் ஒரு சக்தியாகத் துணை நிற்கும் அவளை,

ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?

"நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக்கொழிக்கும் கவிவாணர்
நாவும் செழுங்கருணை
ஓடிப்பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்து நடம்
ஆடிக்களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே."

என்ற பெரியார் வாக்குப்படி அடைக்கலம் புகுந்தால் நம் குறைகள் நீங்கி இன்பம் எய்துவது திண்ணம். இப்பள்ளி மேன்மேலும் செழித்தோங்க அவள் அருள் துணை புரிவதாக.

R. சரசுவதிபாய், B.A.

சங்கீத சபை

"ஆய கலைகள் அறுபத்து நான்[*]கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" என்றார் கம்பர். கலைகள் அறுபத்து நான்கு. அவற்றுள் சிறந்தது இசைக் கலை. இக் கலை நம் பாரத நாட்டினர் தொன்றுதொட்டுப் போற்றும் பொக்கிஷங்களிலொன்று. மக்கள்—மாக்கள், பண்டிதர்—பாமரர் என்று வேற்றுமை பாராட்டாது யாவரையும் ஒருங்கே இன்புறச் செய்வது இஃதொன்றேயாம். நமது நாட்டிலே சங்கீதமானது பொழுது போக்கும் சாதனமாக மட்டுமின்றி கடவுளை வழிபடவும், அடையவும் சிறந்த மார்க்கமாகக் கருதப்படுகிறது. சங்கீத வானில் ஒளி வீசிய மூன்று சுடர்களான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் இவர்களால் சங்கீதமானது தற்போது ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது. இம் மும்மணிகளும் இசைக் கலையால் தாங்கள் பேரின்ப நிலையை அடைந்ததோடன்றி என்று மழியாச் செல்வங்களாகிய கிருதிகளை நமக்களித்திருக்கின்றனர். இவைகளை எஞ்ஞான்றும் அழியாமல் பாதுகாப்பது நம் கடமையாகும்.

நுண் கலைகளிற் சிறந்ததெனக் கருதப்படும் இவ்விசைக் கலையில் மாணவியர் பயிற்சியடைய நம் பள்ளி பல வசதிகளையும், சந்தர்ப்பங்களையும் அளிக்கிறது. நாள் தோறும் பள்ளி இசையோடு கூடிய பிரார்த்தனையில் தொடங்கி, முடிகிறது. பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு வகுப்பிற்கும் சங்கீதம் கற்பிக்கப்படுவதுடன் இசையில் தனி அபிலாஷையுடையவர்களைத் தேர்ந்தெடுத்து வாரமொரு முறை வகுப்பு நடத்தப்படுகிறது. தவிர வருஷம் முழுவதும் நடக்கும் முக்கிய அலுவல்களான விசேஷ பண்டிகைத் தினங்களிலும், கதம்ப நிகழ்ச்சிகளிலும், வருடாந்திர நாடகத்திலும், பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு தினம்,

---

[*] ஒரு நன்றி செய்தவரை உள்ளளவும் நினை.

பழைய மாணவியர் தினம், அன்னையர் தினம் முதலிய நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு யாவரும் மெச்சும் வண்ணம் மாணவியர் இன்னிசை எழுப்பி மகிழ்விக்கின்றனர். பள்ளியில் மட்டுமின்றி வெளியே நடக்கும் தேவாரப் போட்டிகளிலும், ராஜாஜி கூடத்தில் நடக்கும் பஜனையிலும் கலந்து கொள்கின்றனர்.

மாணவியருடைய சங்கீத ஞானத்தைப் பெருக்க வெளியிலிருந்து பல சங்கீத வித்வான்களை யழைத்து இசை சம்பந்தமான சொற்பொழிவுகளையும், இன்னிசைக் கச்சேரிகளையும் பள்ளி ஏற்பாடு செய்கிறது. இவ்வாண்டு ஜூலை மாதம் 7-ஆம் தேதி நடந்த சங்கீத சபை ஆரம்ப விழாவன்று ஸ்ரீ P. பாலகிருஷ்ணன், Carnatic college of Music, அவர்கள் தலைமை வகித்து, வேத காலத்திலிருந்து சங்கீதத்தின் வளர்ச்சியை எடுத்துக் கூறினர். நவம்பர் மாதம் 6-ஆம் தேதி ஸ்ரீ மாயவரம் கிருஷ்ணையர் அவர்களின் சங்கீதக் கச்சேரி தக்க பக்க வாத்தியங்களுடன் சிறப்பாக நடந்தேறியது. நவம்பர் 20-ஆம் தேதி, ஸ்ரீ தேவக்கோட்டை நாராயண ஐயங்கார், ஸ்ரீ கல்யாண கிருஷ்ண பாகவதர் ஆகிய இருவரது வீணைக் கச்சேரி பலரையும் பரவசமடையச் செய்தது. கலையில் ஆர்வம் கொண்ட மேற் கூறியவர்கள் பள்ளியின் மீதுள்ள அபிமானத்தால் ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல் குறிப்பிட்ட தினங்களில் வந்து மாணவியரையும், ரசிகர்களையும் மகிழ்வித்ததற்கு இச் சங்கம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

பள்ளித் தலைவி இசைக் கலைக்கு அளிக்கும் ஆதரவினால் பலர் பயனடைகிறார்கள். மாணவியர்களுக்கும் சங்கீதத்தில் திறமை விருத்தியாகின்றது. இவ்வாண்டு பள்ளியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலைவாணி, இப்பள்ளி இசைக் கலையில் மேம்பாடடைய அருள் புரிவாளாக.

M. ஞானம்பாள்,
காரியதரிசி



A. Malathi, VI-A.

ஒரு மனப்படு ; ஓதுவார்க் குதவு

மாணவியர் சங்க இறுதிக் கூட்டம்: 1954-'55

இவ்வாண்டு மாணவியர் சங்க இறுதிக்கூட்டம் 4-3-55 வெள்ளிக் கிழமையன்று மாலை 4-15 மணிக்கு பள்ளிப் பிரார்த்தனை மண்டபத்தில் தினமணி பதிப்பாசிரியர் ஸ்ரீ A. G. வெங்கடாச்சாரியர் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. மூன்றும் படிவம் முதல் ஆறும் படிவம் வரையுள்ள மாணவியர் அனைவரும் வந்திருந்தனர்.

பள்ளிப்பிரார்த்தனைக்குப் பிறகு தலைவி அவர்கள் அன்னாருக்கு வரவேற்புக்கூறி, அன்றைய அலுவல்களுக்குத் தலைமை வகித்து நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். பள்ளி வருடாந்திரப் போட்டிகளில் பாரதிப்பாட்டுப் போட்டி, கீதைப் போட்டி, தமிழ்ச் சொல் வன்மைப் போட்டி இவைகளில் வெற்றி பெற்ற மாணவிகள் தம் திறமையை வெளிப்படுத்தினர். மாணவியர் சங்கத் தலைவியான சௌ. D. கௌசல்யா பல்வேறு நிகழ்ச்சிகளடங்கிய கோவையான, நீண்டதொரு சங்க ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தாள். பின்னர் ஸ்ரீ A. G. வெங்கடாச்சாரியர் அவர்கள் "சோஷலிஸ்டு ரீதியில் சமூக அமைப்பு" என்னும் விஷயத்தைப் பற்றி அரியதோர் உரை நிகழ்த்தினர். கூடியிருந்த மாணவியர் அனைவருக்கும் அவருடைய சொற்பொழிவு மிக்க பயன் படத்தக்க முறையில் அமைந்திருந்தது. அன்னாருடைய அரிய உபந்நியாசத்தின் சாரம் பின் வருமாறு:—

"என் குழந்தைகள் இங்கு படிக்கிறார்கள் என்பதைத் தவிர இப் பள்ளி சிறந்த முறையில் நடைபெறுவதுபற்றி நான் பெருமையடைகிறேன். மாணவியர் சங்கத் தலைவி படித்த அறிக்கையைக் கேட்ட நான், அதில் குறிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளனைத்தும், என் கண்முன் திரைப்படக்காட்சிபோல் ஒன்றன்பின் ஒன்று நிகழ்வதாகக் கண்டேன். இவ்விழாக்களெல்லாம் நம் மனதில் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டிய பொக்கிஷங்கள்.

நான் இன்று பேச எடுத்துக் கொண்டிருக்கும் விஷயம் சற்று நிரடலானது அதை நான் எவ்வளவு தூரம் மாணவிகளாகிய உங்களுக்குப் புரியும்படி சொல்ல முடியும் என்று பரீட்சித்துப் பார்க்கப் போகிறேன்

ஆவடியில் காங்கிரஸ் நடந்தது. உங்களில் அநேகர் அங்கு சென்றிருந்தீர்கள். அக்கூட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேறியது. நம்முடைய தேசத்தில் எந்தவிதமான சமுதாய வாழ்க்கை இருக்க வேண்டும்? நம் நாட்டு மக்கள் எப்படி சௌக்கியமாக வாழ முடியும்? இத்தேசத்திலுள்ள வசதிகளையெல்லாம் எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வின்றி மொத்தமாக,

நியாயமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் 'சோஷலிஸ்டு ரீதியில் சமூக அமைப்பு' என்பது. இவ்விஷயத்தை நுணுக்கமாக ஆராய்வதற்கு முன் 'சோஷலிஸம்' என்றால் என்ன என்று நாம் தெரிந்து கொள்வது அவசியம். "உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்" என்னும் பெரியார் வாக்குப்படி எல்லாவற்றுக்கும் அடிப்படையான அன்னம், வஸ்திரம் ஆகிய இரண்டும் மனிதனது முக்கியமான தேவைகள். இன்பம் என்பது சந்தோஷம் மட்டுமல்ல, சௌக்கியமும் கூட. தாயுமானவரும் இதைத்தான் தம் பாடலில் சொல்லியிருக்கிறார். குறுகிய மனப்பான்மையுடையவர்கள் எப்போதும் சுய நலத்தையே கருதுவார்கள். உலகமே ஒரு குடும்பம் என்று நினைப்பவர்தான் விசாலமான மனப்பான்மையுடையவர். பழைய காலத்தில் நம் தேவைகள் மிகச் சொற்பமாயிருந்தன. ஆகவே பணத்தைத் தருமத்திற்கு அதிகமாகச் செலவழித்தனர். கன்னியா குமரியிலிருந்து இமயம் வரை யாத்திரீகர்கள் சென்றனர். வழியிலுள்ள புண்ணியத் தீர்த்தங்களிலெல்லாம் நீராடினர். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற புலவர் வாக்குப்படி யாத்திரீகர்களும் பிற மக்களும் பயன்பெறுமாறு வழியில் அன்ன சத்திரங்களும், சாவடிகளும் அமைக்கப் பட்டன. ஆகவே இப்படிப்பட்ட விசாலமான மனப்பான்மையுள்ள நம் நாட்டு மக்களுக்கு 'சோஷலிஸம்' புதிதல்ல.

19வது நூற்றாண்டில் உலகத்தில் இயந்திரப்புரட்சி ஏற்பட்டதை நீங்கள் உங்கள் சமூகநூல் பாடத்தில் படித்திருப்பீர்கள். முதன் முதல் மேல் நாடுகளில்தான் ஆலைத் தொழில் தோன்றியது. 2300 வருஷங்களுக்குமுன் நம் தேசத்தில் நெய்யப்பட்ட உயர்தரமான துணிகளை கிரேக்கர்கள் உடுத்தியிருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட உயர்ந்தரகத் துணிகள் இயந்திரங்கள் ஏற்பட்ட பிறகு மறைந்து போயின. ஆகவே தொழிலாளர்களுக்கு வேலையில்லாது போகவே தேசமும் வறுமையில் ஆழ்ந்தது. இயந்திர சாதனங்களைச் சொந்தமாக்கிக்கொண்டு செல்வந்தர்களான முதலாளிகள் திறமையான வேலையாட்களை அமர்த்தி நிரம்பப் பொருள்களை உற்பத்திசெய்து விற்று அதிக லாபத்தை யடைகின்றனர். பணக்காரன் பணக்காரனாகிக் கொண்டே வருகிறான். ஏழை ஏழையாகவே இருக்கிறான். இந்நிலையை நீக்கத்தக்க வழிகளைத் தேடினர். இலாபத்துக்காகப் பொருள் தயாரிக்கும் முறை அதாவது முதலாளித்துவம் ஒழிந்து, எல்லோருக்கும் முக்கியத் தேவைகளான உணவு, உடை, வீடு முதலியன கிடைப்பதற்கு வழிதேட வேண்டும் என்னும் கிளர்ச்சி ஏற்பட்டது. சமத்துவத்தைக் கோரி 15-ஆம் நூற்றாண்டு இறுதியிலேயே ஒரு புரட்சி ஏற்பட்டது. சமத்து

வம் என்ற கருத்து பலம் பெற்றது. Karl Marx என்னும் பிரபல நூலாசிரியர் தாம் எழுதியுள்ள Capital என்னும் நூலில் "உழைப்பாளர்களே! எழுந்திருங்கள் ஒன்றுபடுங்கள். சேர்ந்துபாடுபட்டால் உங்களுக்கு என்ன நஷ்டமாகப் போகிறது? உங்களுடைய அடிமைத்தளை தகர்ந்து உலகம் உங்களுக்குச் சொந்தமாகப் போகின்றது," என்று எழுதியிருக்கிறார். பணம் உள்ளவனுக்கு எல்லா விதமான பலமும் சேர்ந்துவிடுகிறது. இயந்திரங்கள் முதலியவை தனிப்பட்ட ஒருவருடைய உடைமையாக இல்லாமல், சர்க்கார் எடுத்துக்கொண்டு, எல்லோருடைய பொது உடைமையாகவும் ஆக்கி, யாவருக்கும் வேலை கொடுத்துப் பிழைக்கும்படி செய்யலாம். பொருள் தயாரிக்கும் சாதனங்கள் சமுதாயச் சொத்தாகிவிட வேண்டும்.

இம்முறை நமக்குப் புதிதல்ல. முன் காலத்தில் நம் குடும்பங்களிடையே Joint Family System இருந்து வந்தது ஒரு குடும்பத்தினுள்ள பலரும் உழைத்து, அவரவர் கொண்டுவரும் ஊதியத்தை ஒன்று சேர்த்து, யாவரும் ஏற்றத்தாழ்வில்லாமல் அனுபவித்தனர். அதே மாதிரி ஒவ்வொரு ஊரிலும் ஐக்கியம் ஏற்பட்டால், சுதேச மக்கள் நலமடைவது திண்ணம். கோதாவரி கிருஷ்ணா நதிகளிலுள்ள ஜலம் சமுத்திரத்தில் விழுந்து வீணாகி விடாமல் பல கால்வாய்கள் மூலம் அவைகளைப் பிற ஆறுகளோடு இணைத்து, மக்கள் பயன் பெறும்படி செய்யவேண்டும். தனிப்பட்டவர்களுடைய லாபத்தைவிட எல்லோருடைய சௌக்கியம்தான் முக்கியம் என்பதை மக்கள் உணர வேண்டும். ரஷ்யாவில்தான் முதன் முதன் சோஷலிஸ்டிக் கவர்மெண்ட் ஏற்பட்டது. நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய இடங்களிலும் ஏற்பட்டுள்ளது. சைனாவிலும் உருவாகிக்கொண்டிருக்கிறது. இவ்விடங்களில் சமாதான வழியாலும், பலாத்கார வழியாலும், பல நிர்ப்பந்தங்கள் மூலமும் சோஷலிஸ்டிக் சமுதாயம் ஏற்பட்டது. பாரதியார் பலாத்கார வழி கூடாது என்று சொல்லியிருக்கிறார். ஓட்டு மூலம் ஜனங்களுக்கு நம்பிக்கையுண்டுபண்ணி சமாதானமாகச் செய்யவேண்டும். நமக்கு ரஷ்ய முறை வேண்டாம். பிரிட்டிஷ் முறையையும் கையாள முடியாது. இரண்டுக்கும் நடுத்தரமான தொன்றை உருவாக்குவதைத் தான் நாம் இப்பொழுது 'சோஷலிஸ்டு ரீதியில் சமூக அமைப்பு" என்று சொல்லுகிறோம்.

நம் நாட்டிலோ ஜனத்தொகை அதிகம். வறுமையும் அதிகம், இத்தகைய நிலையில்,

"எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன்
பராபரமே".

என்னும் பெரியார் வாக்குப்படி இம்மாதிரி அமைப்பை ஏற்படுத்துவதுதான் சிறந்த முறையாகும். இது எளிதில் முடியக்கூடிய காரியமல்ல. இருபது அல்லது முப்பது வருடங்கள் கஷ்டப்பட்டால்தான் எல்லோரும் சுகமாக வாழ முடியும் நம்முடைய முன்னோர்களின் முயற்சியினாலும், உழைப்பினாலும், சீர்திருத்தங்களினாலும் நாம் பயனடைவதுபோல், நமக்குப்பின் வரப்போகும் நம் பிரஜைகளின் நலத்திற்காக நாம் இத்தகையதோர் சமுதாயத்தை அமைக்க முற்பட வேண்டும்".

"சோஷலிஸ்டிக் ரீதியில் சமுதாய அமைப்பு" என்ற நிரடலான தலைப்பை எடுத்துக்கொண்டு யாவருக்கும் நன்கு புரியுமாறு விளக்கமாக எடுத்துச்சொல்லிய இப்பெரியாருக்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டவர்களாவோம். வந்தனோபசாரத்திற்குப் பின் மங்கள கீதத்துடன் விழா இனிது முடிந்தது.

CHRONICLER.



D. Shashikala, IV-A.

लेडी शिवस्वामी ऐयर लड़कियों की उच्च पाठशाला पत्रिका

मैलापूर

यूसफ

अरेबिया में यूसफ़ नाम का एक अच्छा आदमी था। वह अपने घर के पास रहनेवाले लोगों को हमेशा सहायता कर रहा था। इसलिये लोग उसको अच्छा आदमी कहते थे।

एक दिन, जब रात हो रही थी, तब एक आदमी यूसफ़ के घर आया। वह यूसफ़ से बोला—"मैं भूखा हूँ। मैंने भूल की इसलिये समूह मुझे पकडने के लिये पीछा कर रहा है। आप कृपा कर के मुझे सहायता दीजिये।"

यूसफ़ ने इयह विदेशी को अपने घर के अंदर बुलाया और खाना दिया। यह विदेशी संकोज में रहता था, पर यूसफ़ने उसको बुलाकर कहा "तुम इसी तरह संकोज मत करो। भगवान के आगे हम सब समान हैं।"

विदेशी यूसफ़ के घर में रात भर गुजरा। सूरज निकलने के पहले यूसफ़, विदेशी को उठाकर, रुप्ये से भरी हुई थैली और एक घोडा देकर उसको जाने दिया। विदेशी अपने किये हुए पापों को सोच कर घुटने टेककर यूसफ से कहा की वही यूसफ के लडके को मारनेवाला है, और उससे माफी माँगी। यूसफ ने उसे माफ किया।

R. मैथिलि, VI. A.

देश भक्ति

मनुष्यको कैसे ईश्वर भक्ति अवश्य है वैसे ही देश भक्ति भी अवश्य है। हर एक आदमी के मनमें ऐसी इच्छा होनी चाहिये कि हमारा देश भी उन्नति के मार्ग पर बढा रहे।

